சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 35

வள்ளுவர் ஆண்டு 2005, மாசி 5உ (17-2-74) ஞாயிறு ஜனவரி 17 முஹற 23 -புத்தகம் 27 இதழ்-25

# 'ஈழம் தமிழனின் சொந்தம்'

## சென்னை நீதிமன்றத்தில் வழக்கு

வரலாற்று ரீதியாகவும், இலக்கிய ரீதியாகவும் ஆட்சி ரீதியாகவும், இலங்கைத்தீவு தமிழ் மககளுக்கே சொந்தமானது என்று உறுதிப்படுத்துமாறு கோரி சென்னை சிவில் நீதி மன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கை சென்னை நகர சிவில் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் திரு. வீ. ஏ. எஸ். சாமிநாதன் தொடர்ந்துள்ளார்; இந்த வழக்கு விசாரணை சென்ற வியாழக்கிழமை (9-2-74) நீதிபதி திரு. மீனுட்சி சுந்தரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது; விசாரணையை நீதிபதி இத்திங்கள் 13ம் நாளுக்கு ஒத்தி வைத்தார்.

வரலாற்றுரீதியாகவும், இலக்கியரீதியாகவும், ஆட்சிரீதியாகவும், இலங்கை தேசம் தமிழர்களுக்கே சொந்தமானது எனறும், அதில் குடியேறிய சிங்களவர்கள் இலங்கையைக் கைப்பற்றி தமிழர்களை உரிமையற்ற அடிமைகளாக்கி விட்டனர் என்றும் வழக்கு மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த வழக்குப் பற்றி உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் கலாநிதி இரா. சனர்த்தனம் கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது:-

''இந்த வழக்குப் புதுமையானது என்பதோடு இலங்கை அரசும் இந்திய அரசின் வெளிவிவகார அமைச்சும் அது பற்றிய விபரம் அறிய முற்பட்டுள்ளன: தமிழர்களுக்கு இலங்கையில் உள்ள சட்டபூர்வமான உரிமையை உலகுககு அறிவிக்க இந்த வழக்கு உதவியாக இருக்கும்

(4-ம் பக்கம் பார்க்க)

## சென்னையில் ஈழத் தமிழர் விடுதலைப்போர் கண் காட்சி!

ஈழத் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தை சித்திரிக்கும் கண்காட்சியொன்று தமிழகத்தின் பல்வேறு முக்கிய நகரங்களிலும் நடைபெறவிருக்கிறது.

இக்கண்காட்சி பெப்ரவரி 3ம் நாள் தொடக்கம் 5ம் நாள்வரை சென்னை மத்திய நூலகத்தில் இடம் பெற்றிருந்தது. இனி, இந்தக் கண்காட்சி தமிழ் நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்தலை நகரிலும் நடத்தப்படுமென்று உலகத்தமிழ் இளைஞர் பேரவை தலைவர் இரா. சனர்த்தனம் தெரிவித்துள்ளார்.

யாழ்நகரில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டின்

(7-ம் பக்கம் பார்க்க)

# "இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைத் தொடர்ந்து கண்டிப்பேன்!"

## சட்ட மன்றத்தில் தமிழக முதல்வர்!

'இலங்கையிலே உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி நடைபெற்ற அமளியில் வேதனைப் படத்தக்க சம்பவங்கள் நிகழ்ந்தது பற்றியும் இது தொடர்பாக இந்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்திடவேண்டும் என்பதையும், இலங்கை நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையாகக் கூட அதைக் கருதாமல் அதை சர்வ தேசியப் பிரச்சினை என்ற அளவிலே அணுகி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் தமிழரசுக் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதைக் குறிப்பிடும்போது அவர் அதே வேகத்தில் இலங்கைப் பிரதமர் சென்னைக்கு வந்தபோது தமிழகத்தினுடைய முதல்வர் சென்று வரவேற்றது பண்பின் அடிப்படையிலே இருந்தாலும், நான் அதைப் பாராட்ட முடியாமலிருக்கிறேன் என்று சொன்னுர்கள்.

அவர்கள் பண்பைப் பாராட்டிவிட்டு என்னைப்

(7-ம் பக்கம் பார்க்க)



# தமிழ் ஈழத்திலும் தமிழகத்திலும் தமிழ்த் தியாகிகளுக்கு அஞ்சலி!

## கடையடைப்பு, கறுப்புக்கொடி! தலைவர்கள் உண்ணுவிரதம்!

## சென்னையில் அஸ்தி அடக்கம் நினைவுச் சின்னம் உருவாகும்!

யாழ் நகரில் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று (10. 1. 74) வெளிநாட்டறிஞர்களின் தமிழைக்கேட்கவென யாழ் வீரசிங்கம் மண்டபத்தின் முன்றல் வெள்ளம்போல் திரண்டு வந்திருந்த தமிழர் கூட்டம் மீது எவ்வித எச்சரிக்கையும் காரணமுமின்றி பொலிசார் திட்டமிட்டு நடத்திய மிருகத்தனமான வெறித்தாக்குதலின் விளைவாக உயிரிழந்த தமிழர்களுக்கு சென்ற பெப்ரவரி ஒன்பதாம் நாள் தமிழ் ஈழமும் தமிழ் நாடும் தனது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக செலுத்தியது.

தமிழாராய்ச்சி மாநாட்டில் தமிழர்கள் உயிரிழந்த 31வது நாளான 9-2-74 அன்று தமிழர் கூட்டணியின் வேண்டுகோட்படி, தமிழ் ஈழம் முழுவதும் கடைகள், வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டு பூரண துக்கதினம் அனுட்டிக்கப்பட்டது. பார்த்த இடமெங்கணும் கருப்புக்கொடிகள் உயரப்பறந்து, தமிழர்களின் கண்ணீரையும் கண்டனத்தையும் தெரிவித்தன.

பொலிசாரின் மிலேச்சத்தனமான காட்டுமிராண்டித் தாக்குதலை கண்டித்தும், இறந்த தமிழ்த் தியாகிகளுக்கு அஞ்சலி தெரிவித்தும், அனுட்டிக்கப்பட்ட இந்துக்க நாளன்று யாழ் கோட்டை, முனீஸ்வரர் ஆலய முன்றலில் பகல் முழுவதும் தமிழர் கூட்டணித் தலைவர்கள் உண்ணுவிரதம் அனுட்டித்தனர்:

உண்ணுவிரதம் ஆரம்பிப்பதற்கு முன்னர், தமிழ்த் தியாகிகள் உயிர் நீத்த வீரசிங்கம் மண்டப மைதானத்துக்கு கூட்டணித் தலைவர்கள் சென்று அந்த இடத்தில் மலர் வளையங்களை சமர்ப்பித்து தங்கள் அஞ்சலியை செலுத்தினர்.

உண்ணுவிரதத்தில் 50க்கு மேற்பட்ட பொறுக்கியெடுக்கப்பட்ட தொண்டர்களுடன் தலைவர்களும் பங்கு பற்றினர் வீரசிங்கம் மண்டபத்துக்கு எதிரே இறைபுகழ் வாழி எனும் தொண்டர் உண்ணுவிரதம் அனுட்டித்தார். வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னுலுள்ள மின்சாரக் கம்பத்திலும் கறுப்புக்கொடி பறந்து கொண்டிருந்தது.

மாலையில் யாழ் கோட்டை மைதானத்தில் பொதுக்கூட்டம் நடத்துவதற்கு பொலிசார் அனுமதி மறுத்திருந்தபோதிலும் — திட்டமிட்டபடி முனீஸ்வரர் கோவில் முன்றலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஒலிபெருக்கியின்றி நடைபெற்ற இக் கூட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் தலைவர்களின் உரைகளை கேட்டனர்.

வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, மன்னர் திருகோணமலை, மூதூர் மாவட்டங்களிலும், கடைகள் அடைக்கப்பட்டு, கறுப்புக் கொடிகள் உயர்த்தப்பட்டு துக்கம் அனுட்டிக்கப்பட்டன. மரணமடைந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக மன்னர் புனித தேவமாதா ஆலயத்தில் துக்க பாடல் பூசை நடைபெற்றது.

ஈழத்தமிழர்களுக்காக தன் வாழ் நாளெல்லாம் குரல் கொடுத்து வந்த மூதறிஞர் ராஜாஜியின் பூதவுடம்பு சென்னையில் தகனம் செய்யப்பட்ட இடத்துக்கு அருகில் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று தமிழுக்கு உயிர் கொடுத்த தியாகிகளின் அஸ்தி 9-2-74ல் புதைக்கப்பட்டது.

உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் இரா. சனர்த்தனம் இத்தகவலை வெளியிட்டுள்ளார். இந்த அஸ்தி யாழ்ப்பாணத்திலிருந்து சென்னைக்கு எடுத்துவரப்பட்டு புதைக்கப்பட்டதாக அவர் அறிவித்துள்ளார்.



தமிழ்த் தியாகிகளின் அஸ்தி புதைக்கப்பட்ட இடத்தில், நினைவுச் சின்னம் ஒன்றையும் உலகத் தமிழ் இளைஞர் பேரவை எழுப்ப இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்;

### ஐ. நா. வில் ஆர்ப்பாட்டம்

இலங்கைத்தமிழர் நிலை பற்றி சர்வதேச நீதிச் சபைக்கு தமிழர் கூட்டணித் தலைவர் தந்தை செல்வா அனுப்பி வைத்துள்ள மகஜரின் பிரதிகளை அனைத்துலக நாடுகளின் முக்கிய தலைவர்களுக்கும் தாம் அனுப்பி வைக்க இருப்பதாகத் தெரிவித்துள்ள கலாநிதி இரா. சனர்த்தனம் —இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதியை கண்டித்தும், அதை உலகநாடுகளின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டும் ஐ. நா. சபை முன்பு அடுத்த மாதம் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## பாடசாலைப் பகிஷ்கரிப்பு நூறுவீதம் வெற்றி!

தமிழாராய்ச்சி மாநாட்டில் தமிழுக்கு உயிர்கொடுத்த தியாகிகளுக்கு அஞ்சலி தெரிவித்தும், பொலிசார் நடத்திய கண்மூடித்தனமான வெறித்தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்தும், 8.2 74 வெள்ளிக்கிழமை வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் மாணவ மாணவியர் பாடசாலைகளையும், கல்லூரிகளையும் பூரணமாகப் பகிஷ்கரித்தனர்.

நூற்றுக்கு நூறு வீதம் வெற்றிபெற்ற இப்பாடசாலைப் பகிஷ்கரிப்பில் பெற்ருர்களும் அதிக ஆர்வத்துடன் ஒத்துழைப்பு நல்கினர் — மாணவிகளும் விசேட ஆர்வம் காட்டியது குறிப்பிடத்தக்கது;

யாழ்ப்பாண குடாநாட்டிலுள்ள சிங்கள பாடசாலை தவிர்ந்த ஏனைய சகல தமிழ்ப் பாடசாலைகளும் கல்லூரிகளும், மாணவர்கள் செல்லாததால் அன்று வெறிச்சோடிக் கிடந்தன.

இதுவரை நடைபெற்ற பாடசாலைப் பகிஷ்கரிப்புக்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# தமிழ்ப் பயிரை அழித்துவிட வருகிறது யானை-

## அதை விரட்டுதலே மன்னூர் வாழ் தமிழ்பேசும் மக்களின் வேலை!

அன்பு நண்பா,

"சாகும் போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும்—
என் சாம்பலும் தமிழ் மணந்து வேகவேண்டும்!
பாடையிலே படுத்தூரைச் சுற்றும் போதும்
பைந்தமிழில் அழும் ஓசை கேட்கவேண்டும்"

என்று பாடிய கவிஞன் கூற்றுக்கு தாமே இலக்கணமாகி—அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் தமிழ்கேட்க வந்து — தமிழ் பகைவர்களின் கோழைத்தனமான குரூரத்தாக்குதலுக்கு தங்கள் இன்னுயிர் ஈந்து— தமிழுடன் சங்கமமாகிவிட்ட தமிழர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும்—தமிழ் இனத்தார் மீது மாற்றார் அன்று நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்தும் சென்ற (பெப்ரவரி 8, 9) வெள்ளி, சனி ஆகிய இரு நாட்களிலும் தமிழ் ஈழம் பொங்கியெழுந்து கறுப்புக் கொடிகளை உயர்த்தி, ஹர்த்தால் நடத்தியதை நீ அறிவாய்!

தமிழர்கள் துடிதுடித்து உயிர் விட்டதைக் கண்டபின்னர்—தமிழன்னை இரத்தக் கண்ணீர் வடித்துநிற்கின்ற நிலையில் பாடசாலைப் படிப்பு நமக்கு ஒரு கேடா என்று கேட்டு—துடிப்புமிக்க நம் மாணவ மாணவிகள் —தமிழ் சமுதாயத்தின் கண்மணிகள்— பாடசாலைகளையும் கல்லூரிகளையும் நாற்றுக்கு நூறு வீதம் பகிஷ்கரித்து—அதிகாரவெறி பிடித்த சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு தம் எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்கள்.

யாழகமும், மீன்பாடும் தேனகமும், வன்னித்திருநாடும் வளமிக்க மன்னாரும், தன்மானத் தமிழர்கோட்டமாம் திருக்கோணமலையும், தமிழ் சமுதாயத்துக்கு இழைக்கப்பட்ட மிலேச்சத்தனமான கொடுமையை எதிர்த்து —கடைகளை பூட்டி, கறுப்புக்கொடி உயர்த்தி பூரண துக்கதினத்தை அனுட்டித்திருக்கின்றன; அதிலும் நண்பா, திருக்கோணமலைத் தமிழ் மக்கள் தொடர்ந்து இரண்டு நாட்களும் இந்த ஹர்த்தாலை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறார்கள்!

எங்கும் கருங்கொடிகள்! எங்கும் கடையடைப்பு! எங்கும் பாடசாலைகள் பகிஷ்கரிப்பு! எங்கும் எதிர்ப்புணர்ச்சி! எங்கும் விடுதலைப் பேரார்வம்! எங்கும் இன உணர்ச்சி!!

வெற்றிகரமாக நடைபெற்ற இந்த ஹர்த்தாலைப் பார்க்கும் போது—தமிழ் ஈழத்தில் மொழியுரிமையை முன் வைத்து பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற அந்தப் பிரமாண்டமான ஹர்த்தால் என் நினைவுக்கு வந்திடுகிறது. ஆம், அந்த ஹர்த்தால் எப்பொழுது நடைபெற்றது தெரியுமா? 1956ம் ஆண்டு பெப்ரவரித் திங்கள் 20ம் நாளில் நடைபெற்றது அந்த ஹர்த்தால்!

சென்றகிழமை நடைபெற்ற ஹர்த்தால்—தமிழர்கள் சிலர் — மிருகத்தனமாகப் படுகொலை செய்யப்பட்டதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் நடைபெற்ற ஹர்த்தாலாகும்! 1956ம் ஆண்டு பெப்ரவரித் திங்கள் 20ம் நாள் நடைபெற்ற ஹர்த்தால், தமிழன்னையின் உரிமையைப் பறித்து—அவளது துகிலை உரியும் முயற்சியில் மாற்றார் இறங்கியபோது—அதை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டமாகும்!

தமிழ்த்தாயின் உரிமையை மறுத்து, அவளின் துகிலை உரிய 18ஆண்டுகளுக்கு முன்னர் முதன் முதலாக திட்டமிட்ட சதி உருவாக்கப்பட்ட போதே தமிழினம் பொங்கி யெழுந்து களத்தில் குதித்தது! அந்த நாள்தான் 1956 பெப்ரவரி 20ம் நாள்!

தமிழன்னையின் உரிமையை பறித்து — அவளை மானபங்கப்படுத்திட அன்று திட்டமிட்ட அந்த மதோன் மத்தர்கள் யார் — தமிழைப் பழித்த அவர்களை என்தாய் தடுத்தாலும் விடேன்—யார் அவர்கள் கூறு தூள் தூளாக்கி காட்டுகிறேன்—என்று துடிதுடித்தபடி நீ கர்ச்சிப்பது எனக்குக்கேட்கிறது நண்பா! ஆம், தமிழைப் பழித்தவர்களை—தமிழுக்கு குழி தோண்டுவதற்கு அத்திவாரமிட்டவர்களை சனநாயக முறையில் பழிக்கு பழிவாங்கிட இப்போது ஓர் அருமையான வாய்ப்பு உனக்கு கிடைத்துத்தான் இருக்கிறது!

1956ம் ஆண்டு பெப்ரவரி 20ம் நாள்தான் அதுவரை தேசியம் என்றும் ஐக்கியம் என்றும் மாய்மாலம் பேசி ஆட்சியிலிருந்தபடியே தமிழினத்தின் உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறித்துவந்த ஐக்கிய தேசியக்கட்சி தமிழன்னையின் கழுத்தறுக்கும் சிங்களம் மட்டும் எனும் தீர்மானத்தை முதன் முதலாக களனி மாநாட்டில் கொண்டுவந்து நிறைவேற்றிய நாளாகும்! அன்றே இந்நாட்டில் தேசிய ஐக்கியம் என்பது வெறும் கானல் நீராயிற்று; சிங்களம் மட்டும் என்ற இனவெறிக்கொள்கைக்கு எதிராக தமிழினம் போர்க்கோலம் பூண்டது! பூரண ஹர்த்தாலும் நடத்திற்று!

அன்றிலிருந்துதான் தமிழ் ஈழம் வேறு! சிங்கள நாடுவேறு என்றாயிற்று! ஐக்கிய தேசியக் கட்சியை உண்மையான தேசிய கட்சி என்று உள்ளபடியே நம்பியிருந்த காலஞ்சென்ற அறிஞர் சு. நடேசபிள்ளை போன்றவர்கள், அந்தக் கட்சியில் ஐக்கியமும் இல்லை; தேசியமும் இல்லை என்பதை அறிந்து, அதை பகிரங்கமாக அறிவித்துவிட்டு அக்கட்சியிலிருந்து இரத்தக்கண்ணீர் வடித்தபடியே சாபமிட்டுக்கொண்டு வெளியேறிய காட்சி இன்னும் நம் நெஞ்சங்களிலே பசுமையாக தெரிகிறது!

அப்படிப்பட்ட கட்சி — தமிழ் விரோத கொள்கைகளை—தமிழ் சமுதாயத்தை குழி தோண்டிப்புதைக்கும் நச்சுக் கொள்கைகளை— பின்பற்றிவந்த—பின்பற்றி வருகின்ற—சிங்கள வெறிக்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மானத் தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற மன்னார்த் தொகுதியிலே—1956ம் ஆண்டு முதல் தந்தை செல்வாவின் சீரிய தலைமையின் கீழ் நடைபோட்டுவரும் மக்கள் மத்தியிலே—தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக் கோட்டமாம் தமிழர் கூட்டணியை — தமிழரசுக் கட்சியை எதிர்த்து போட்டியிட இப்போது துணிச்சலுடன் முன்வந்திருக்கிறது என்றால் — தமிழ் பேசும் மக்கள் அவ்வளவுதூரம் அரசியல் வரலாற்றை மறந்த மரமண்டைகள் என்று அந்தக் கட்சி தப்புக்கணக்குப் போட்டுவிட்டதென்பதுதான் அர்த்தம்!

இந்நாட்டுத் தமிழ் தேசிய இனத்தைப் பொறுத்தவரை — எல்லாச் சிங்களக் கட்சிகளும் சிங்கள இன வெறி என்ற ஒரே குட்டையிலூறிய மட்டைகளே என்பதைத் தமிழ் பேசும் மக்கள் அறிவார்கள்! தமிழ் பேசும் மக்களை ஒழித்துக்கட்டுவதில்—தமிழ் சமுதாயத்தின் உரிமைகளை பூண்டோடு அழிப்பதில் சிங்களவர்களை தலைவர்களாகக் கொண்ட

### அரசியல் மேடை

அரசியல் கட்சிகள் அனைத்தும் தமக்குள் ஒன்றுபட்டே நெடுங்காலமாக இயங்கி வந்திருக்கின்றன: இன்றும் இயங்கிவருகின்றன!

புதிய அரசியல் சட்டத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டணி அரசு கொண்டு வந்து நிறைவேற்றியகாலை — அதில் தமிழ் பேசும் மக்களுக்கு குழிபறிப்பதாக கருதப்பட்ட விதிகளை—தமிழ் உரிமைகளை மறுக்கும் விதிகளை—தமிழரசுக் கட்சி மூர்த்தண்யமாக எதிர்த்து நின்றது! தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் கிடைப்பதற்கு வழி செய்யும் வகையில் அரசியல் சட்டத்துக்கு பல திருத்தங்களை அரசியல் நிர்ணய சபையில் கொண்டு வந்தது!!

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை முன் வைத்து—புதிய அரசியல் சட்டத்துக்கு தமிழரசுக் கட்சி கொண்டுவந்திருந்த ஒவ்வொரு திருத்தத்தையும் — ஆளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து எதிர்த்து வாக்களித்தது ஐக்கிய தேசியக் கட்சி! புதிய அரசியல் சட்டத்தில் தமிழினத்துக்குக் குழிபறிக்கின்ற—தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை மறுக்கும் அம்சங்களையெல்லாம் ஆளும் கட்சியுடன் சேர்ந்து அரசியல் நிர்ணய சபையில் ஆதரித்து வாக்களித்தது ஐக்கிய தேசியக் கட்சி!

பௌத்த மதத்துக்கு தரப்பட்டுள்ள அதே இடம் ஏனைய இந்து, இஸ்லாமிய, கிறித்துவ மதங்களுக்கு தரப்பட வேண்டும் என்று தமிழரசுக்கட்சி கொண்டு வந்திருந்த திருத்தத்தை ஐக்கிய தேசிய கட்சி எதிர்த்தது மட்டுமல்ல பௌத்த மதத்துக்கு முதலிடம் தந்தால் போதாது — தனியிடம் தரவேண்டும் என்று பௌத்த மதவெறி பிடித்து கூச்சலிட்ட கட்சி ஐக்கிய தேசியக் கட்சி!

அப்படிப்பட்ட தமிழ்ப் பகைவர்கள்தாம் இன்றைக்கு—தமிழ் பேசும் மக்களின் நண்பர்கள் என்று கூறிக்கொண்டு —மானத் தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற மன்னாரில் வாக்குக் கேட்டுக் கூடாரமடித்திருக்கிறார்கள்! இவர்களது கடந்த காலத்திய துரோகங்களை கழுத்தறுப்புக்களை—தமிழ் பேசும் மக்கள் இவ்வேளையில் சற்று அசை போட்டுப்பார்த்திட வேண்டாமா?

காட்டைவெட்டிக் களனியாக்கி அட்டைக் கடிக்கும் அல்லல் பலவற்றுக்கும் ஆளாகி — மலையகத்தைப் பொன் கொழிக்கும் பூமியாக்கிய 15 இலட்சம் தமிழ் பேசும் தொழிலாளர்களது குடியுரிமைகளை கொடூர சட்டங்களால் பறித்தெடுத்து — அவர்களது பிரதிநிதித்துவ பலத்தை இல்லாமற்செய்து அம்மக்களை அரசியல் அநாதைகளாக்கி, தமிழினத்தின் அரசியற் பலத்தை சரிபாதியாக வெட்டிக் குறைத்தவர்கள் ஐக்கிய தேசிய கட்சியினர்!

தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களாகிய [illegible] கல்லோயா [illegible] இடங்களில், திட்டமிட்டு சிங்களவர்களை வெளியிடங்களிலிருந்து கொண்டு சென்று குடியேற்றி — தமிழ் பேசும் மக்களின் நிலங்களை அபகரித்து—தமிழ் சமுதாயத்தை அழித்திட சதித்திட்டம் தீட்டி, அதை அமுல்படுத்திய கட்சி ஐக்கிய தேசியக் கட்சி!

தமிழ் பேசும் மக்களின் — குறிப்பாக — இஸ்லாமிய மக்களின் தொகுதியாக இருந்திருக்கவேண்டிய அம்பாறைத் தொகுதியை தனது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் சிங்களத் தொகுதியாக மாற்றுவதற்கு வழி வகுத்த கட்சி ஐக்கிய தேசியக்கட்சி!

'சிங்களம் மட்டும்' 'பௌத்தம் மட்டும்' என்கிற ஏகாதிபத்திய வெறியுணர்வை முதன் முதலாக ஈழத்தில் உருவாக்கி வளர்த்து தமிழ் மக்களின் உரிமைகளை குழிதோண்டுவதற்கு வழிவகுத்த கட்சி ஐக்கிய தேசியக் கட்சி!

தமிழ் பேசும் மக்களுக்கு அற்ப சொற்ப உரிமைகளை ஒப்புக்கொண்ட பண்டா செல்வா ஒப்பந்தத்துக்கு எதிராக வெறித்தனமான பிரச்சாரத்தை மேற்கொண்டது மட்டுமல்லாமல் — இன்றைக்குக் கூட, அன்று தாம் அப்படிச் செய்தது பற்றி பெருமைப்பட்டுக் கொள்ளும் கட்சி ஐக்கிய தேசியக்கட்சி!

1965ம் ஆண்டு, மாவட்டசபை தருவோம் தமிழ்ப் பல்கலைக்கழகம் தருவோம் என்று எல்லாம் கூறி தமிழ் பிரதிநிதிகளின் ஆதரவைப் பெற்று ஆட்சியமைத்துவிட்டு பின்னர் வாக்குறுதிகளை நிறைவேற்றாது தமிழ் மக்களை ஏமாற்றியகட்சி ஐக்கிய தேசியக் கட்சி!

இன்று கூட தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கொழும்பு மாநகர சபையில் தாம் நடத்தும் ஆட்சியில் தமிழ் மொழிக்கு உரிமை வழங்க மறுக்கும் கட்சி ஐக்கிய தேசியக் கட்சி!

அதிகம் ஏன்? சனவரி 10ம் நாள் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது தமிழ் மக்கள் மீது நடைபெற்ற பொலிஸ் வெறித்தாக்குதல் பற்றி அனுதாபமோ—கண்டனமோ தெரிவிப்பதற்குக்கூட விருப்பமின்றி இருக்கின்ற கட்சி ஐக்கிய தேசியக்கட்சி!

இப்படிப்பட்ட கட்சிதான் தமிழ் பேசும் மக்களின் வாக்குகளைக் கோரி மன்னார் இடைத்தேர்தலில் போட்டியிடுகிறது என்றால் அதற்கு வாக்களித்து தங்களுக்கு தாங்களே நஞ்சு குடித்துக்கொள்வதற்கு தமிழ் பேசும் மக்கள் மூட்டாள்கள் அல்லர்!

நண்பா, புதிய அரசியல் சட்டத்தை முன் வைத்து தம்முடன் போட்டியிடும்படி ஆட்சியாளருக்கு சவால் விடுத்து, தம்முடைய காங்கேசன்துறை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார் தம்முடைய தமிழ் ஈழத்தின் முதல்வர் பெரியவர் செல்வா! செல்வாவுடன் மோதுவதற்கு அஞ்சி நிலை தடுமாறிய சிங்கள ஆட்சி, இடைத்தேர்தலை நடத்துவதற்கும் முதுகெலும்பின்றி—வல்முறை, அது இதென்று நொண்டிக் காரணங்களைக் கூறி இழுத்தடித்துக்கொண்டு வருவதை தமிழ்மக்கள் அறிவார்கள்!

இதனைக் கண்டு, கொதிப்படைந்த அமரர் அழகக்கோன்—' ஏ, திராணியற்ற சிங்கள ஆட்சியே! நீ காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடத்தாவிட்டாலென்ன — இதோ நான் வானுலகு செல்கிறேன் — அப்போது மன்னார் தொகுதிக்கு இடைத்தேர்தலை நீங்கள் வைத்தே தீரவேண்டிய சூழ் நிலை தோன்றும்— அந்தத்தேர்தலில், புதிய அரசியல் சட்டத்துக்கும் உங்கள் பொல்லாத ஆட்சிக்கும் என் தமிழ் மக்கள் நிச்சயம் சாவு மணியடித்திடுவர்; அதை நான் வானுலகிலிருந்து பார்த்து மகிழ்ந்திடுவேன் என்று கூறிவிட்டு, அமரராகிவிட்டார்!

ஆனாலும் — முதுகெலும்பும் திராணியும் அற்ற ஆட்சியாளர்களால் புதிய அரசியல் சட்டத்தை முன்வைத்து மன்னாரிலும் தமிழர் கூட்டணியுடன் மோத முடியவில்லை! மன்னாரின் தங்கம்—அமரர் அழகக்கோனின் இலட்சிய அணிக்குள் — வளர்ந்தவர்களல்லவா மன்னார் தொகுதியின் தன்மானத் தமிழ் மக்கள்! எனவே ஆட்சியாளர் மூலைக்குள் முடங்கிவிட்டனர்—தேர்தல் அரங்குக்கே தலைகாட்டாமல் முக்காடு போட்டுக்கொண்டு!! மன்னாரில் போட்டியிட்டுப்பாருங்கள் என்று தமிழர் கூட்டணிக்கு சவால் விடுத்த துரோகப்பர் சேலையை கட்டிக்கொண்டு மூலைக்குள் படுத்து விட்டார்!

இந்நிலையில்—தமிழினத்தின் தனிப்பெரும் விடுதலை இயக்கமாம் தமிழர் கூட்டணியுடன் மற்றோர் சிங்களக் கட்சியான ஐக்கியதேசியக் கட்சி மோதிப்பார்க்க நிற்கிறது! அதன் மூக்குடைத்திடத்தயாராகிவிட்டனர் தமிழ் பேசும் மக்கள்!!

மன்னார் —தமிழ் ஈழத்தின் தலை சிறந்த திருநகரம்! வரலாற்றுப் பெருமை மிகு துறைமுகத்தையும், தேவாலயங்களையும் கோவில்களையும் கொண்ட பெருநகரம்! அங்கு எண்ணெய் வள ஆராய்ச்சியும் தொடங்கியிருக்கிறது. எண்ணெய் மட்டும் இருந்து விட்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாரில் எழுந்த தமிழோசை

## (2) சங்கிலியன் ஆண்ட மண்ணில்....!

கோவை மகேசன்

தமிழ் வாழ்க!

தமிழ் மக்கள் வாழ்க!!

என் ஈழத்தமிழ் நாடு வாழ்க!

முரசு முழக்கத்தையும் இழித்துக்கொண்டு இந்த வாழ்த்து முழக்கங்கள் எழுகின்றன. குதிரைகளின் குளம்பு ஒலிகள் 'டக்டக்' என்று மிகச் சமீபமாகவே கே..கின்றன!

என்ன இது என்று கண்ணைக்கசக்கிவிட்டுக்கொண்டு நான் சுற்று முற்றும் பார்க்கிறேன்.

அதோ வீணைக்கொடியொன்று கம்பீரமாக காற்றில் அசைந்தாடிப் பறந்து கொண்டிருக்க ஓர் அழகுத் தேர் வானத்திலிருந்து கீழே இறங்குகிறது —

அதிலிருந்து இறங்கி வருவது யார்? ஒளியுமிழும் கண்கள்; நிமிர்ந்த நன்னடை! தமிழ் வீரம் கொட்டுகின்ற முகம்! விரிந்த மார்பு! தடந்தோள்கள்! யார் இந்த வீரத்தமிழ் மகன்!

ஆ... புரட்சிக்கவிஞரின் பாடலொன்று எனக்கு நினைவுக்கு வருகிறது...!

குன்றெடுக்கும் நெடுந்தோளான்
கொடை கொடுக்கும் கையான்
குள்ள நரிச் செயல் செய்யும்
கூட்டத்தின் கூற்றம்......!

அடடா! சந்தேகமேயில்லை அவனேதான்! ''என் தமிழர் மூதாதை என் தமிழர் பெருமான்'' இராவணன் அல்லவா அவன்!

என் சிந்தையெலாம் தோள்களெலாம் பூரித்து எழுகின்றன! புது முறுக்கேறுகின்றன!

'வாழ்க தமிழ், வாழ்க என் ஈழத்தமிழ் நாடு!!

வீணைக்கொடியோனின் வாயிலிருந்து மீண்டும் எழுந்திட்ட வாழ்த்தொலிகள் ஒரு தடவை என்னை மெய்சிலிர்த்திட வைக்கின்றன!

'வணக்கம் தமிழ் மன்னா! வணக்கம் எங்கே இந்தப் பக்கம் திடீரென்று வருகிறீர்கள்!' என்று கேட்டேன்!

'தம்பி, ஈழத்தமிழகத்தில் எழுந்திட்ட தமிழோசை என் மக்கள் எழுப்பிய வாழ்த்து முழக்கங்கள்—உணர்ச்சி ஒலிகள்—நானு திசைகளிலும், முட்டி எதிரொலித்தன. அந்த ஒலி வானுலகிலும் எதிரொலித்தது; இங்கு என் தமிழ் மக்கள் எழுப்பிய தமிழ் முழக்கம் கேட்ட பின்னர் அங்கே என்னால் எப்படி இருக்கமுடியும்? நான் ஆண்ட பூமியல்லவா இது? நான் ஆண்ட காலத்தில் இங்கு தமிழ் ஆண்டது; ஆடலும், பாடலும், ஊடலும் கூடலும், பண்ணும் பரதமும், இசையும் கூத்தும், கலையும் கேளிக்கையுமாக என் தமிழ் மக்கள் எத்துணை மகிழ்ச்சியுடன் வாழ்ந்திருந்தனர்? அந்த எழிற் கோலத்தை தமிழன்னைக்கு நடைபெறுகின்ற இந்த மாநாட்டின் போதாவது மீண்டும்காணலாம் என்ற நம்பிக்கையில்வந்திருக்கிறேன் நான் ஆண்ட காலத்தில்—பத்துத்திக்கும் புகழ் பரப்பி—ஈழத்தில் தமிழர் தலை நிமிர்ந்து வாழ்ந்திருந்தனர்! வீணைக் கொடி எங்கும் பறந்தது! வீடுகள் தோறும் மகிழ்ச்சி வெள்ளம்! தமிழ்த்தாய் அரசோச்சினாள்! இதைப் பார்த்துத்தான் அனுமன் ''ஆடுனர் பாடுனராகிக் களிக்கின்றுரலால்கவல்கின்றுர்ஒருவரைக் காணோன்'' என்று இராமனிடம் கூறினான்! அப்படிவாழ்ந்த என் மக்கள் இன்று பசியும் பிணியும் வாட்டிட அடிமைகளாகி அல்லற்படும்நிலை கண்டு என் நாடி நரம்புகள் அனைத்தும்சூடேறுகின்றன... அந்தப் படுபாவி விபீஷணன் அன்று என்னைக் காட்டிக் கொடுத்து இந்த நாட்டை அதற்குப் பரிசாகப் பெற்றானே ... அவன் அதனால் என்ன பயன் பெற்றான்...?''

—இவ்வாறு மீசை துடிதுடிக்க, இடி முழக்கம்போல ம பசிக் கொண்டிருந்தான் வீணைக்கொடி விறல் வேந்தன்;

நான் குறுக்கிட்டு—'மன்னா அந்த விபீஷணன் பரம்பரை இந்நாட்டில் இன்னும் அற்று விடவில்லை — அன்று உன்னை ஆரியனுக்குகாட்டிக்கொடுத்தான் அந்தத்துரோகி விபீஷணன். அவன்வழியில்தப்பாது வந்தோர்—இன்றைக்கு ஆரியரின் வாரிசுகள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் சிங்களவர்களிடம் தமிழையும், தமிழ் மக்களையும், தமிழ் நாட்டையும் காட்டிக் கொடுத்து, அற்ப சலுகைகளை பெற்று வயிறு கழுவி வருகிறார்களே மன்னா! தமிழன்னைக்கு அகில உலக ரீதியில் நடைபெறும் இந்த மாநாட்டைக் கூட தடை செய்யும் படி ஒரு விபீஷண வாரிசு சிங்கள ஆட்சிக்கு சிபார்சு செய்திருந்தது உனக்குத் தெரியுமோ என்னமோ?'' என்றேன்!

''அப்படியா'' என்று ஆச்சரியத்துடன் கேட்ட இராவணேசன், சிங்களவர்களா? அது யார்? நான் ஆட்சி செய்த காலத்தில் அப்படியொரு இனமே இலங்கையில் இருந்ததில்லையே!'' என்றான்!

''ஆம் மன்னவா, அன்று நீ ஆண்ட போது இலங்கை முழுவதுமே இன்பததமிழர்களின் நாடாகத்தான் இருந்தது; இடையில் வந்து குடியேறி—எப்படியோ தமக்கென ஒருகலப்பு மொழியை உருவாக்கிக்கொண்ட ஒரு இனம் தான் சிங்கள இனம்! முந்திவந்த செவியை பிந்திவந்த கொம்பு மறைப்பது போல — இந்நாட்டின் சொந்த இனமாகிய தமிழ் இனத்தை சிங்கள இனம் விழுங்க முயற்சிக்கிறது!''— இது என்பதில்!

''அப்படியா? அது ஒரு போதும் நடக்காது — என் தமிழ் வீரர்கள் தங்கள் உடம்பில் ஒரு சொட்டு உயிர் இருக்கும்வரை அதற்கு இடமளிக்க மாட்டார்கள். மீண்டும் நிச்சயம் தமிழ்க் கொற்றம் இந்நாட்டில் உருவாகும் என்பதற்கு இந்த மாநாட்டில் தமிழின் மீது மக்கள் காட்டுகின்ற எழுச்சிப் பேரார்வமே தக்க உதாரணமாக இருக்கிறது!''

—இவ்வாறு [illegible] முன்னர் மீண்டும் 'வாழ்க தமிழ் வாழ்க என் மக்கள்' என்ற எழுச்சி முழக்கத்துடன் நந்திக்கொடி பொறிக்கப்பட்ட அழகுத் தேர் ஒன்று வந்து நின்றது; ஆஜானுபாகுவான தோற்றமுடன் கூடிய ஒரு மாவீரன் இறங்கி வந்தான்!

''என்ன அப்படி எல்லோரும் பார்க்கிறீர்கள்? நான் யார் என்று? நான்தான் தமிழ் ஈழத்தின் கடைசி மன்னன் — பரங்கித் தலைகளைப் பந்தாடியவன் பெயர் சங்கிலி'' என்று கர்ச்சிக்கும் குரலில் முழங்கினான் அவன்!

''சங்கிலி மன்னா! வாழ்க உங்கள் வீரம்! வாழ்க உங்கள் கொற்றம்! வாழ்க தமிழ்'' என்று நான் குரலெழுப்பினேன்!


''இது நான் ஆண்ட மண்! யாருக்கும் அடிமையின்றி சுதந்திரமாக தமிழரசு நடத்தியவன் நான்! எனது இரத்தம் இந்த மண்ணில் கலந்திருக்கிறது!'' — இவ்வாறு கூறிய சங்கிலி, குனிந்து ஒரு பிடி மண்ணை எடுத்து அதற்கு முத்தமிட்டான்!

''இதோ அருகில் தெரிகிறதே நல்லூர் சட்டநாதர் ஆலயம். இந்த ஆலயம் நான் கட்டுவித்த ஆலயம்! அதோ தெரிகிறதே—அந்தக் கோபுரம்! அதுதான் நான் ஆண்டிருந்த அரண்மனையின் மேலைக் கோபுரவாசல்! அதில் பறந்து கொண்டிருந்தது என் நந்திக்கொடி! அதற்கு எதிரே தெரிகின்ற அந்த பழைய வீடுதான்.. அந்தப்புரப் பாவையர்கள் அன்று வாழ்ந்திருந்த அழகு மாளிகை! கோட்டை கொத்தளம் அமைந்திருந்த சங்கிலித் தோப்புக்குள் யமுனா நதியிலிருந்து நீரோடை வந்த 'யமுனாரி' என்றோர் தடாகம் அமைத்து வைத்தேன்! அந்தத் தடாகத்தில் அந்தப்புர மாளிகையிலிருக்கும் பெண்கள் நீராட வரும் பொருட்டு, அம்மாளிகையிலிருந்து 'யமுனாரி' வரை சுரங்கப்பாதை கூட அமைத்து வைத்திருந்தேன்! நான் ஆண்டிருந்த நாட்களில் தமிழ் அரசோச்சியது! தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ்ந்தனர்! தமிழ்ப் புலவர்கள் தமிழாய்ந்தனர்! என் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ்ந்தனர்! இந்த வீதிகள் தோறும் குதிரைகளின் குளம்பொலியும், வீடுகள் தோறும் வீணையொலியும், நாதசுர ஓசையும், பாவையர் ஆடிடும் பரத ஒலியும், தமிழ் வீரர்களின் வாளொலியும் வேலொலியுமே கேட்டபடியிருந்தன. நல்லூர் வீரமாகாளியம்மன் கோவில் வீதியிலே 18 நாட்கள் பரங்கியருடன் போராடி அவர்களை விரட்டியடித்தேன்! அவர்களிடமிருந்த துப்பாக்கிகளையும், பீரங்கிகளையும் என் கையிலிருந்த வேலாலும், வாளாலும், சட்டியாலும் தூள் தூளாக்கி அவர்களை விரட்டியடித்தேன்; சற்றில் ஒரு நாள் பரங்கியரிடம் என்னைக் காட்டிக் கொடுத்தானே என் உறவினன் ஒருவன்—படுபாவிகாக்கை வன்னியன்! அவன் மட்டும் அன்று காட்டிக்கொடுத்திராவிடில் பரங்கியரை விரட்டியிருந்திருப்பேன்! தமிழரசும் வீழ்ச்சியுற்றிருக்காது''


—இவ்வாறு வேகத்துடன் சொல்லத்தொடங்கி சோகத்துடன் சொல்லி முடித்தான் சங்கிலி மன்னன்!

'காவலா! கலங்காதே! துரோகத்தினால் நீ இழந்த தமிழரசை மீண்டும் நிலைநாட்டிட தயாராகிவிட்டார்கள் தமிழ மக்கள். தமிழுக்கு மீண்டும் முடிசூட்டிடத் தயாராகிவிட்டார்கள்! இதோ, யாழகமெங்கும் நீ இந்த தமிழ் மாநாட்டின் போது காண்கிறாயே தமிழ் எனும் பேருணர்ச்சி! அந்த உணர்ச்சியின் அடிப்படை என்ன தெரியுமா? அதுதான் தமிழ் சமுதாயத்தின் விடுதலை உணர்ச்சி! நீ ஆண்ட பூமியின்—நல்லூரில — தலைவனைக் காக்கை வன்னியனின் வாரிசு ஒருவன்தான் இன்று இருக்கிறான்! அவன் தமிழ்த்தாய்க்கு நடைபெறும் இந்த அனைத்துலக மாநாட்டை தடை செய்யும்படியன்றோ மாற்றுரிடம் இரந்தான்! ஆனால் இன்று நீ பார்க்கிறாயே — பார்த்துவிட மெய்சணும் நீக்கமற நிறைந்து காணப்படுகின்ற தமிழ் எழுச்சியை; இந்தஎழுச்சிக்கு முன்னால் காக்கை வன்னியர்கள் இனி தூள் தூளாகப் போவது நிச்சயம்! மக்களின் இந்த தமிழ் எழுச்சி வெள்ளத்திற்கு எதிராக நீச்சல் போட்ட துரோகிகளால் இனி முடியாது! அந்தக்

(9-ம் பக்கம் பார்க்க)



குன்றெடுக்கும் நெடுந்தோளான்—கொடை கொடுக்கும் கையான்—குள்ளநரிச் செயல் செய்யும் கூட்டத்தின் கூற்றம்—ஈழத்தை ஆண்ட வீணைக் கொடியோன் தமிழ் மன்னன் இராவணன். (அலங்கார ஊர்திப் பவனியில் வந்த காட்சி—படப் பிடிப்பு: பாலேந்திரா)



நா... ...புபாதது தமிழரசு நடாத்தி—பரங்கித் தலைகளைப் பந்தாடி—தமிழர்களின் சுதந்திரம் காத்திடப் போராடிய தமிழ் ஈழத்தின் கடைசி மன்னன் சங்கிலியன் அரண்மனையும் ... திடும் கண் கொள்ளாக் காட்சி. (அலங்கார ஊர்திப் பவனியில் இடம் பெற்ற காட்சி—படப் பிடிப்பு தங்கவேல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# இ. போ. சவும் தமிழும்

பொது மக்களின் நலனுக்காக செயல்படுவதாக கூறப்படும் இலங்கைப் போக்குவரத்துச் சபை இன்று பொது மக்களின் தலையிலேயே கைவைக்கும் நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது.

இ. போ. ச. பேருந்து ஒன்றில் ஓர் பயணம் மேற் கொண்டு திரும்புவதற்கிடையில் — சந்திரமண்டலத்துக்கு சென்று திரும்பி விடலாம் என்று கூறுமளவுக்கு பேருந்துப் பயணம் இன்று சிக்கலான ஒன்றாகிவிட்டது!

கால் கடுக்க பல மணி நேரம் காத்து நின்றாலும், பேருந்து கிடைப்பதில்லை; அப்படிக் கிடைத்தாலும் பல வேளைகளில் அது இடைவழியில் 'மக்கர்' பண்ணி விடுகிறது!

பேருந்துக் கட்டணமும் இன்று மக்களால் தாங்க முடியாத அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. கிடைக்கின்ற ஊதியத்தை இ. போ. ச. வுக்கு அப்படியே தாரைவார்க்க வேண்டிய நிலையில் இன்று ஏழை மக்கள் இருக்கிறார்கள்.

இத்தனை தொல்லைகளையும் பொதுமக்களுக்கு தந்து வரும் இ. போ. ச. வகுப்புவாத அடிப்படையில் தமிழ் மொழியை ஒதுக்குவதிலும் புறக்கணிப்பதிலும் மட்டும் அதி தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

தமிழ் பேசும் மக்கள் பெருவாரியாக வாழுகின்ற கொழும்பு புறக்கோட்டை தலைமை பேருந்து நிலையத்துக்கு சென்றால் அங்குள்ள பொதுமக்களுடன் சம்பந்தப்பட்ட பல அறிவித்தல்கள் தனிச்சிங்களத்திலேயே காணப்படுகின்றன.

இதே போல பல்வேறு இடங்களிலும், இ. போ. ச. வினால் தமிழ் மொழி முற்றாக ஒதுக்கப்படுவதாக அப்போதைக்கப்போது பல்வேறு புகார்கள் வந்த வண்ணமாகவே யிருக்கின்றன.

தமிழன் கொடுக்கின்ற காசு, இ. போ. ச. வுக்கு காசாக தெரியவில்லைப்போலும்!

எங்கேயாவது ஓரிடத்தில் தப்பித்தவறி தமிழ் இருந்து விட்டால்—அது கொலை செய்யப்பட்ட தமிழாகவே பெரும்பாலும் காட்சியளிக்கும்!

இப்போது — பேருந்துகளின் சேரிடப்பலகைகளில் — தமிழ் மொழியை காண்பது அரிதாகி வருகிறது. இதனால் தமிழ் மட்டுமே தெரிந்த தமிழ் பேசும் மக்கள், பேருந்து செல்லும் இடம் எது என்பதை அறிய முடியாமல் திகைத்து திண்டாடுகிறார்கள்!

சேரிடப்பலகைகளில் எல்லாம் பெரும்பாலும் பென்னம் பெரிய எழுத்துக்களில் தனிச்சிங்களமே கண்களை உறுத்துமளவுக்கு காட்சி தருகின்றன.

தமிழ் மக்களின் தாயகமாகிய வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கூட தனிச்சிங்களமே இ. போ. ச. பேருந்துகளின் சேரிடப்பலகைகளை இப்போது ஆக்கிரமித்து வருகின்றன.

கண்பார்வை யிருப்பவர்களுக்கெல்லாம், இ. போ. ச. பேருந்துகளின் சேரிடப்பலகைகளில் தமிழ் ஒதுக்கப்பட்டிருப்பதும், தனிச்சிங்களம் காட்சி தருவதும் தெளிவாகத் தெரிகிறது.

குருட்டுக்குருடர்கள் மட்டுமே அதைக் காண மறுக்கிறார்கள்.

இ. போ. ச. வின் இத்தமிழ் ஒழிப்பு—தமிழ் மக்களுக்கு கஷ்டத்தைக் கொடுப்பது மாத்திரமல்ல — தமிழ் மக்களை வேண்டுமென்றே அவமதிப்பதுவுமாகும்! தமிழர்களின் உரிமையை மறுப்பதுவாகும்.

சேரிடப் பலகைகளில் சிங்களமொழியை ஐந்து அங்குல அகலத்திலும், தமிழ்மொழியை இரண்டு அங்குல அகலத்திலும் எழுதும்படி இ. போ. ச. ஓர் உத்தரவிட்டிருப்பதாக கூறப்பட்டது.

இது சம்பந்தமாக காவலூர் பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம், போக்குவரத்துத்துறை அமைச்சருக்கும், இ. போ. ச. தலைவருக்கும் ஆட்சேபக் கடிதங்களை தீட்டியிருந்தார்.

தமிழுக்கு ஒரு காலத்தில் சம உரிமை கோரியவர்களின் நிர்வாகத்திலே தமிழ் இப்படி ஒதுக்கப்படலாமா? தமிழை இரண்டு அங்குலத்திலும், சிங்களத்தை ஐந்து அங்குலத்திலும் எழுதும்படி உத்தரவிடப்பட்டது உண்மையா? என்றும் அவர் இடித்துக் கேட்டிருந்தார்.

அதற்குப் பதில் எதும் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து வந்ததாக தெரியவில்லை!

இதன்பின்னர்—அண்மையில் உடுப்பிட்டி பா. உ. திரு. க. ஜெயக்கொடி அவர்கள், போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தனவிடம் இதே கேள்வியை தேசிய பேரவையில் நேரடியாகவே கேட்டார். இதற்குப் பதிலளித்த போக்குவரத்து அமைச்சர் பின்வருமாறு கூறினார்:

"இ. போ. ச. பேருந்துகளில் தமிழ் எழுத்துக்கு பாகுபாடு காட்ட வேண்டுமென்றோ தமிழ் எழுத்தின் அகலத்தைக் குறைக்கவேண்டுமென்றோ இ. போ. ச. எப்போதும் எந்தவகையான உத்தரவையும் பிறப்பித்தது கிடையாது. சிங்கள எழுத்தைப் போன்ற அளவிலேயே தமிழ் எழுத்தும் இருக்கவேண்டும் என்பதே எமது கொள்கை. இதற்குமாறாக யாராவது உத்தரவு இட்டிருந்தால் அது விஷமத்தனமானது."

—இப்படிக்கூறிய அமைச்சர், அத்தகையோர் யாரென்பதை தனது கவனத்திற்கு கொண்டுவந்தால்தான் நடவடிக்கை எடுக்கத்தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

அமைச்சர் கூறியது உண்மையாக இருந்தால்—அவரது ஆதிக்கத்துக்குட்பட்ட இ. போ. ச. வில் தமிழை ஒதுக்கும்படி பாரதூரமான முறையில் உத்தரவிட்ட குறித்த அதிகாரியார் என்பதை கண்டுபிடிப்பது மற்றவர்களைவிட, அமைச்சராலேயே சுலபமாக முடியும்! எனவே அமைச்சின் கொள்கைக்கு முரணாக தமிழை ஒதுக்கும்படி உத்தரவிட்டவரைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதும், தமிழை மீண்டும் சகல இ. போ. ச. பேருந்துகளின் சேரிடப் பலகைகளிலும் ஏனைய அறிவித்தல்களிலும் எழுதும்படி தம் கைப்பட ஓர் விசேட உத்தரவை இ. போ. ச. வுக்கு விடுப்பதும் அமைச்சரின் உடனடிக் கடமையாகும்!

இதைச் செய்யாமல் வெறும் கண்துடைப்பு காட்டுவதில் தமிழ் மக்கள் திருப்தியடையமாட்டார்கள்! ஏமாறவும் மாட்டார்கள்!

தமிழர்களின் முன்னுள் நண்பர்கள் என்று கூறப்படும் [illegible] ஜத் தூண்களில் ஒருவராகிய இ. போ. ச. தலைவரும் இது சம்பந்தமாக என்ன செய்யப்போகிறார்கள் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்!

# தமிழுக்கு உயிர் கொடுத்த இளந்தளிர் கேசவராஜன்



அமைதி தவழும் தோற்றம்; சிந்தனை தவழும் முகம்; மீசையரும்பும் பருவம்; பதினைந்தே வயது நிரம்பிய பைந்தமிழ் வாலிபன்; பெயர் வேலுப்பிள்ளை கேசவராஜன் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் மாணவன்.

இந்த இளந்தளிர் இன்று நம்மிடையே இல்லை. கடந்த சனவரி 10ம் நாள் வீரசிங்கம் மண்டபத்தில் வெளி நாட்டறிஞர்களின் தமிழ் கேட்க வந்திருந்த போது — வெறிபிடித்த சிங்கள மக்கள் அரசின் பொலிசார் நடத்திய தாக்குதலின் பின்னர் உயிர் துறந்த தமிழ்த் தியாகிகளில் ஒருவராகி தமிழர் நெஞ்சங்களில் இடம்பிடித்து விட்டார்.

இந்த இளைஞர், தொல்புரம் மேற்கு அணிஞ்சிலடியைச்சேர்ந்தவர் 4-8-1959ல் பிறந்தவர். தந்தையார் பெயர் இராமலிங்கம் வேலுப்பிள்ளை. தாயார் பெயர் மனோன்மணி. இரு சகோதரர்களும், ஒரு சகோதரியும் இவருக்குண்டு.

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் க. பொ. த. வகுப்பில் படித்து வந்தவர்.

இந்த இளந்தளிர் தமிழுக்காக உயிர் கொடுத்து தமிழ் ஈழத்தின் விடுதலை இயக்க வரலாற்றில் தனது பெயரை பொன்னெழுத்துக்களால் பொறித்துகொண்டார். இந்த வீர இளைஞரைப் பெற்றோர் கண்ணீர் மல்க நமது நிருபரிடம் கூறியதாவது:-

"கேசவராஜனின் பூதவுடல் மறைந்த போதிலும் அவனது புகழுடம்பு நீடித்து நின்று எம் கவலையை மறக்கவைக்கிறது."

## இரண்டு செய்திகள்!

இ. போ. ச. பஸ்களில் தமிழ் எழுத்துக்கள் புறக்கணிக்கப்படுவதாக நேற்று தேசிய பேரவையில் ஒத்திவைப்புப் பிரேரணையின்போது கூறப்பட்ட குற்றச் சாட்டுக்களை போக்குவரத்து மந்திரி திரு. லெஸ்லி குணவர்த்தன திட்டவட்டமாக மறுத்தார்.

—வீரகேசரி (8-2-74)

இ. போ. ச. பஸ்வண்டிகளின் பெயர்ப்பலகைகளில் தமிழ் ஒதுக்கப்பட்டு சிங்களத்துக்கு முக்கிய இடமளிக்கப்பட்டிருப்பது நியாயமற்ற செயல் என்பதை பிரதமரின் மகனும் சுதந்திரக் கட்சி வாலிபர் இயக்கப் பிரமுகருமான திரு. அனுரா பண்டாரநாயகா ஏற்றுக்கொண்டார்.

—வீரகேசரி (9-2-74)

## யாழ்ப்பாணத்தில் அனுரா சொன்ன

### ஒரேயொரு உண்மை

"காங்கேசன் துறையில் திரு. செல்வநாயகம் தேர்தலில் வெற்றி பெறுவார் என்பது யாவரும் மறுக்க முடியாத உண்மை. அவர் அங்கு எப்பொழுது தேர்தலில் போட்டியிட்டாலும் நிச்சயம் ஜெயிப்பார்."

— யாழ்ப்பாணத்தில் அனுரா பண்டாரநாயகா.

## திறந்த வெளியரங்கும் துரையப்பாவும்!

"சனவரி 10-ம் திகதிக் கூட்டத்தை திறந்த வெளியரங்கில் தான் நடத்தவிருந்தோம். ஆனால் 9-ம் திகதி மாலை ஊர்திகள் பவனியின் போது பெய்த கடு மழையையும், பொதுமக்கள் பட்ட அவதியையும் கண்ட பின்னர்—10-ம் திகதி கூட்டத்தை வீரசிங்கம் மண்டபத்துக்குள் நடத்துவதென்று முடிவு செய்து அப்படியே செய்தோம்.

"ஆனால்—வெள்ளம் போல் தமிழர் கூட்டம் திரண்டதன் காரணமாகவும், மழையில்லாமலிருந்ததாலும், பத்தாம் திகதி இரவு 8 மணியளவில் தொடர்ந்து திறந்த வெளியரங்கில் கூட்டம் நடத்துவோமென முடிவு செய்து — நண்பர் வி. எஸ். துரைராசாவும் பாலேந்திரா என்ற மற்றோர் தொண்டரும், திறந்த வெளியரங்குக்கு சென்ற கதவுகளை திறந்து விடும்படி அங்கிருந்த காவலாளியிடம் கேட்டனர்.

"அப்போது, அக்காவலாளி—துரையப்பா தனது அனுமதிக்கடிதமின்றி திறந்த வெளியரங்கைத் திறந்துவிட வேண்டாமென்று கட்டளையிட்டிருப்பதாகவும், அவரிடம் சென்று கடிதம் வாங்கிவரும் படியும் கூறினர்.

"உடனே துரைராசாவும் பாலேந்திராவும் துரையப்பா வீட்டுக்கு சென்றனர். உங்களுக்குத் தெரியும்—துரையப்பா இப்போதெல்லாம் வீட்டில் இருப்பதில்லையென்று-அன்றும் அவர் வீட்டில் இல்லையென்று அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

"எனவே தான் — திறந்த வெளியரங்கு திறந்துவிடப்படாத நிலையில் — வேறு வழியின்றி — 10ம்திகதி இரவு கூட்டத்தை வீரசிங்க மண்டப முகப்பில்—ஆனால் வீரசிங்க மண்டப வளவுக்குள் — நடத்தவேண்டிய நிலைமை நமக்கு ஏற்பட்டது.

முதல் ஏழு நாட்களும் நடந்ததுபோல திறந்த வெளியரங்கை துரையப்பா தடைபோடாது திறந்து வைத்திருந்திருப்பாரானல் இறுதி நாள் துக்ககரமான சம்பவங்களை சிலவேளைகளில் தவிர்த்திருக்கலாம் —

— வெள்ளவத்தை சரசுவதி மண்டபக் கூட்டத்தில் பேராசிரியர் வித்தியானந்தன் கூறியது.

## ஈழர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் வாழும் தமிழர்கள் அனைவரும் குடியேறியவர்கள் அல்லர். இலங்கையின் பூர்வீகக் குடிகள் தமிழர்களே என்பதையும் உலகுக்கு உணர்த்த இது ஒரு வாய்ப்பாக இருக்கும்."

—இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கச்சதீவு சம்பந்தமாக இந்திய உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கொன்றில் கச்சதீவு இந்தியாவுக்கே சொந்தம் என்று இந்திய உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கும் வெற்றி வெற்றி என்பதே பேச்சு!

## தமிழினத்தின் விடிவெள்ளி மன்னாரில்! வரலாறு காணாத மகளிர் கூட்டம்!

## ஆட்சியாளருக்குப் பாடம் புகட்டிட மக்கள் தயாராகி விட்டனர்!

மன்னார்த் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடுகின்ற திரு. செ. மா. யோன்மார்க் அவர்களை ஆதரித்து, முதலாவது தேர்தல் பிரச்சார கூட்டம் 2. 2. 74 பிற்பகல் 3 மணியளவில் பேசாலையிலும் தொடர்ந்து மாலை 6 மணி தொடக்கம் மன்னார் நகர முற்றவெளியிலும் நடைபெற்றது.

நகர மத்தியில் நடைபெற்ற கூட்டத்தில் கிழக்கே வவுனிக்குளம் தொட்டு மேற்கே தலைமன்னார் வரையும் வடக்கே வெள்ளாங்குளம் தொட்டு தெற்கே மறிச்சுக்கட்டி முள்ளிக்குளம் வரையும் பரந்து கிடக்கும் இத்தொகுதியின் எல்லாப் பகுதிகளிலுமிருந்து பல ஆயிரக்கணக்கான தமிழ் பேசும் பெருங்குடி மக்கள் கலந்து கொண்டனர்.

மன்னார்த் தொகுதி தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களின் வரலாற்றில் முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்குத் தாய்க்குலம் பெருந்திரளாக வந்திருந்து தலைவர்களின் பேச்சை வெகு உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தமை இக் கூட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

மேற்படி கூட்டத்துக்கு, தமிழ்பேசும் மக்களின் ஒற்றுமை கட்டிக்காக்கப்பட வேண்டும் என்ற பேரார்வத்தால் தமது வேட்பு மனுவை திரும்பப்பெற்றுக் கொண்ட வரும் மன்னார் மாவட்ட முன்னணி சட்டத்தரணியுமான திரு. சபா. மாசிலாமணி அவர்கள் தலைமைவகித்தார்கள்.

மேடையில் ஈழத்தமிழர் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. மு. சிவசிதம்பரம், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. எம். செல்லச்சாமி, தமிழர் கூட்டணிச் செயலாளர்—தளபதி, நாவலர் தமிழ் இளைஞர் காவலர் திரு. அ. அமிர்தலிங்கம் உடுவில் தர்மர், பருத்தித்துறை பா. உ. திரு. துரைரத்தினம் சாவகச்சேரி பா. உ. திரு. வ. ந. நவரத்தினம், திருமலை பா. உ. பா. நேமிநாதன், மன்னார் திரு. சூசைநாயகம், ஜனாப் முத்துராஜா, எருக்கலம்பிட்டி கே. எஸ். ஏ. கபூர் உட்பட பல தமிழர் கூட்டணிப் பிரமுகர்கள் காணப்பட்டனர்.

### துரைரத்தினம் பேச்சு!

கடந்த 17 ஆண்டுகளாக, 5 தேர்தலில் மன்னார் மாவட்டத்தின் முடிசூடா மன்னனாக விளங்கிய, கொள்கை உறுதி படைத்த அமரர் திரு. வி. அ. அழகக்கோன் அவர்களால் இத்தொகுதி பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. 1956ம் ஆண்டிலிருந்து தமிழரசுக்கட்சியின் பாதையில் சென்றுகொண்டிருக்கின்ற இத்தொகுதி மக்கள், ஈழத்தமிழர்கள் ஒன்றுகூடி தமக்குள் இருந்த மாறுபாடுகளை, வேறுபாடுகளை மறந்து அமைத்துள்ள தமிழர் கூட்டணியின் சார்பில், தமிழரசுக்கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் திரு. செ. மா. யோன்மார்க் அவர்களை ஆதரிக்க வேண்டும் என்றார்.

### திரு. மு. சிவசிதம்பரம் பேச்சு

கடந்த தேர்தல் காலங்களில் நாம் தேர்தல் மேடைகளில் நின்று ஒருவரையொருவர் திட்டிக்கொண்டிருந்தோம்; வசைமாரி பொழிந்து கொண்டிருந்தோம். ஆனால் 1972ம் ஆண்டில், இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் சிறப்பாக அமையவேண்டும் என்பதற்காக, தமிழ் மக்கள் தொடர்ந்து அடிமைகளாக இருக்கும் நிலை ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காக மாறுபட்டு வேறுபட்டுநின்ற நாம் தமிழர் கூட்டணி என்ற அமைப்பில் ஒரே ஈழத் தமிழ்ச் சமுதாயமாக ஒன்று பட்டு நிற்கிறோம்.

பிரதேச, மத, வேறுபாடுகளை நாம் மறக்க வேண்டும்.

## மன்னார் முற்றவெளிக் கூட்டத்தில் தமிழ்த் தலைவர்கள் வீரமுழக்கம்!

தனிப்பட்ட கோபதாபங்களைவிட தமிழினத்தின் நன்மை, இந்நாட்டில் தமிழினத்தின் எதிர்காலம் பற்றியே நாம் சிந்திக்கவேண்டும். 1947ம் ஆண்டுக்குப்பின்னர் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் தமிழரசு வேட்பாளரை ஆதரித்துப் பேசும் முதலாவது தேர்தல் பிரச்சாரக் கூட்டம் இது தான். தமிழர் கூட்டணி அமைக்கப்பட்டபின் நடைபெறும் முதலாவது தேர்தலும் இது தான்.

எல்லாத் தமிழர்களும் ஒன்றுபட்டு விட்டார்கள்; தமிழர்களின் உரிமையை பற்றிப் பேச தமிழர் கூட்டணியைத் தவிர வேறு எந்த ஒரு கட்சிக்கும் தமிழ் மக்கள் அனுமதி தரமாட்டார்கள் என்பதை முதன் முதலில் எடுத்துக்காட்டும் ஒரு வாய்ப்பு மன்னார்த்தொகுதி மக்களுக்கே முதலில் கிடைத்துள்ளது. இதனை அவர்கள் சரியாகப் பயன்படுத்தி திரு. யோன்மார்க் அவர்களைத் தெரிவு செய்து யாழ்ப்பாணம் வவுனியா, திருமலை, மட்டக்களப்பு, மலையகத் தமிழர்களுடன், இலங்கையில் வாழும் எல்லாத் தமிழர்களும் சேர்ந்து இலங்கைத் தமிழ் மக்களின் ஒற்றுமையை உலகம் அறியும்படி காட்ட வேண்டும்.

தமிழர்களைப் பொறுத்த வரையில் ஐ. தே. கவும், ஸ்ரீ. ல. சு. க. வும் ஒன்று தான். இவர்களை நம்பி தமிழ் மக்கள் வாழமுடியாது.

புதிய அரசியல் சட்டம் கொண்டு வரப்பட்ட போது தமிழ்மொழிக்கு உரிமை வேண்டும் என தமிழரசார் கொண்டு வந்த தீர்மானத்தை ஐ. தே. க. ஆதரிக்கவில்லை. இவர்களா தமிழருக்கு நன்மை செய்யப் போகிறார்கள்? சிறுபான்மை இனங்களின் சமயங்களான இஸ்லாமிய, கிறிஸ்தவ இந்து மதங்களுக்கு அரசியல் சட்டத்தில் தகுந்த இடம் அளிக்கப்படவில்லை [illegible] ஐ. தே. க. [illegible] எழுப்பியதா?

எனவே மானமுள்ள எந்தத் தமிழனும் இக்கட்சிகளுக்கு வாக்களிக்க துணியமாட்டான். இக்கட்சிகளுக்கும் தமிழர்களிடம் வாக்குகேட்கும் யோக்கியதை இல்லை. எந்த முகத்துடன் இவர்கள் மன்னாரில் வந்து வாக்குக் கேட்கிறார்களோ தெரியாது. மன்னார்தொகுதி மக்கள் இம் மாதம் 25ந் திகதி மறக்கமுடியாத ஒரே ஒரு பாடத்தை ஐ. தே. கட்சிக்கு படிப்பித்துக் கொடுப்பார்கள் என்பது திண்ணம்.

### தந்தைசெல்வா பேச்சு

'கிழக்கு மாகாணத்தில் இந்து, கிறித்தவ, இஸ்லாம் என்ற வேறுபாடு இன்றி பல முஸ்லிம் சகோதரர்கள் நாடாளுமன்றம் செல்வதற்கு, ஏனைய சமய மக்கள் தத்தம் வாக்குகளைக்கொடுத்துள்ளனர். புதிய அரசியல் திட்டத்தை இலங்கைத் தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதனை சனநாயக ரீதியில் அகில உலகுக்கும் எடுத்துக் காட்டக் கூடிய வாய்ப்பு மன்னார்த் தொகுதிக்குக் கிடைத்துள்ளது. எனவே மத, பிரதேச வேறுபாடின்றி தமிழ்பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு திரு. ஜோன்மார்க் அவர்களைத் தெரிவுசெய்வதன் மூலம் எமது எதிர்ப்பைக் காட்ட வேண்டும்.

### நேமிநாதன்

'பேசிப்பேசிப் பொழுதைக் கழித்துவிட்டோம். செயலில் இறங்கவேண்டும். தமிழினத்தின் எதிர்கால நலனை எல்லோரும் தத்தம் மனதில் பதியவைக்கவேண்டும். 10ந் திகதி யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழியின் பெருமையைப்பேசும் கூட்டத்தில் நடந்த சம்பவத்தின் பின்பு எந்தத் தமிழனும் சிங்களக் கட்சிகளுக்கு வாக்களிக்கத் துணியமாட்டான்.

### வ. ந. நவரத்தினம்

'நான் பேசாலைக்குச் சென்றபோது கடந்த 25 வருடங்களாக, ஐ. தே. க. வுக்கு மட்டுமே வாக்களித்ததாகவும், இந்தத்தேர்தலிலும் அப்படியே செய்ய விருந்ததாகவும், ஒரு குடும்பத்தினர் சொன்னார்கள். ஆனால் கடந்த மாதம் 10ந் திகதியின் பின்பு அந்த எண்ணத்தைக் கைவிட்டு விட்டதாயும், தமிழர் கூட்டணிதான் இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் ஒரே கட்சி என்பதை ஏற்று திரு. ஜோன்மார்க் அவர்களை ஆதரிப்பதாயும் கூறினார்கள்.

இதே போல எல்லாரும் வேறுபாடுகளை மறந்து தமிழர்களின் ஒற்றுமையை காட்ட வேண்டும்.

### திரு. செல்லச்சாமி

'மலையக மக்கள் மன்னார்த் தொகுதியின்தேர்தல் முடிவுகளை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் மட்டுமல்ல உலகமே இதை எதிர்பார்த்து நிற்கிறது. புதிய அரசியல் சட்டம் கொண்டு வரப்பட்ட பின்னர் தமிழ்ப் பகுதியில் நடக்கின்ற முதலாவது தேர்தலில் மன்னார்த்தொகுதி மக்கள் மறத்தமிழர்கள், மானத்தை தம் உயிரெனக் கருதும் மக்கள், என்ன பதில் அளிப்பார்கள் என்பது நிச்சயமாகத்தெரியும்.

ஈழம் வாழ் தமிழ்பேசும் மக்களில் பிரிக்கமுடியாத ஒரு அம்சமே மன்னார்த்தமிழ் மக்கள். இத்தேர்தலில் இ. தொ. கா. தனது பூரண ஆதரவை தமிழர் கூட்டணி வேட்பாளர் திரு. ஜோன் மார்க் அவர்களுக்கு வழங்குகிறது.

அடுத்த 26ந் திகதி நிச்சயம் மன்னார்த்தொகுதி மக்களின் குரலாக மட்டுமல்ல, இலங்கை வாழ் தமிழ்பேசும் 35 இலட்சம் மக்களின் சார்பில் அவர்கள் குரல் தே. அ. பேரவையில் ஒலிக்கத்தான் போகின்றது. இந் நாட்டின் பொருளாதாரத்தை தாங்கி நிற்கும், தமிழ் தொழிலாளராம் மலையகப் பெருங்குடி மக்களின் சார்பில், ஜோன் மார்க் அவர்களைப் பல்லாயிரக்கணக்கான வாக்குகளால் வெற்றியடையச்செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

### அமிர்தலிங்கம் முழக்கம்

'இந் நாட்டிலே புதிய அரசியல திட்டம்கொண்டுவரப்பட்டபின் தமிழ்ப் பகுதிகளில் நடைபெறுகின்ற முதலாவது தேர்தல் இது. புதிய அரசியல் திட்டத்தை தமிழ் மக்கள் மிக்க வலிமையுடன் எதிர்க்கிறார்கள் என்பதை ஆட்சியாளருக்கு எடுத்துக் காட்ட மன்னார்த்தொகுதி மக்களுக்கு கிடைத்திருக்கும் அருமையான ஒரு வாய்ப்பு இது.

தமிழுக்காக வாழ்ந்து, தமிழுக்காக பதவியைத் துறந்து, தமிழே தன் உயிர் மூச்செனவாழ்ந்து வரும், ஈழத் தமிழினத்தின் விடுதலைக் கவிஞனும் காசி ஆனந்தன் இதே மேடையில் வைத்துத்தான் தமிழுக்காக கைது செய்யப்பட்டதை நினைக்கிறேன். ஆயிரமாயிரம் தமிழ் இளைஞர்கள் கவிஞரின் வழியில், பீடுநடை போட்டு, தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு. ஜோன் மார்க்கை ஆதரித்து நிற்பதைநான் காண்கிறேன்.

காசி ஆனந்தன் உட்பட, சிறையிலுள்ள தமிழ்இளைஞர்கள் மன்னார் முடிவை எதிர் நோக்குகிறார்கள். அவர்களின் தமிழுணர்ச்சிக்கு, ஊக்கம் கொடுக்கப்போகிறார்கள் மன்னார்த்தொகுதி மக்கள்—குறிப்பாக மன்னார்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஒரு இனத்துக்கு ஒரு நீதி!

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், மாவை சேனாதிராசா, வண்ணை ஆனந்தன், முத்துக்குமார், மகேந்திரன்.........இப்படி எண்ணற்ற தமிழ் இளைஞர்கள் ஆண்டுக் கணக்காக—திங்கள் கணக்காக—பூட்டிய இரும்புச் சிறைக்குள் கிடந்து புழுங்குகிறார்கள்.

இந்த இளைஞர்களை விடுதலை செய்; அன்றேல் நீதி விசாரணை செய்வதற்கு நீதிமன்றத்துக்குக் கொண்டு வா—என்று ஈழத் தமிழர்கள் ஒன்றுபட்டுக் குரல் எழுப்பியும்—

அது சிங்கள ஏகாதிபத்திய வாதிகளின் செவிகளில் விழுவதாக இல்லை!

தொடர்ந்தும் விசாரணை ஏதுமின்றி இந்த இளைஞர்களைச் சிறைக்குள் வைத்திருப்பது மாத்திரமல்ல—

மேலும் மேலும் பல தமிழ் இளைஞர்களையும்—மாணவர்களையும் கேட்டுக் கேள்வியின்றிச் சிறைக்குள் தள்ளி வருகிறது சிங்கள ஆட்சி!

ஆனால் அதே வேளையில்—

கண்டியில் அண்மையில் நடைபெற்றதே பௌத்த பிக்குகளின் ''சத்தியாக்கிரியை'' அதில் பொலிசாரால் சிங்கள இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டிருக்கிறான்!

கைது செய்யப்பட்ட அந்தச் சிங்கள இளைஞனை உடனே விடுதலை செய்ய வேண்டும்; இன்றேல் பொலிஸ் நிலையம் மீது படையெடுப்போம் என்று அங்கிருந்த புத்த பிக்குகள் பயமுறுத்தினார்களாம் பொலிசாரை!

உடனே அஞ்சி நடுங்கி அந்த இளைஞரை விடுதலை செய்தனராம் பொலிசார்!

செய்தி ஏடுகள் கூறுகின்ற சேதி இது! தமிழ் இளைஞர்களை விசாரணை ஏதுமின்றி ஆண்டுக் கணக்காகச் சிறையிடாதே; அவர்கள் மீது விசாரணை நடத்து; அல்லது விடுதலை செய்! என்ற தமிழ் மக்களின் நியாயபூர்வமான கேள்வி ஆட்சியாளர் செவிகளில் விழவில்லை!

பௌத்த பிக்குகள் பயமுறுத்தியதும்—அஞ்சி நடுங்கிச் சிங்கள இளைஞரை நிபந்தனையின்றி விடுதலை செய்கிறார்கள் கண்டியில்!

ஆம்—இங்கு நடப்பது ஒரு இனத்துக்கு ஒரு நீதி! சிங்கள இனத்துக்கு ஒரு நீதி: தமிழினத்துக்கு இன்னொரு (அ)நீதி!!

இந்தச் சிங்கள ஏகாதிபத்தியத்திலிருந்து மீட்சி பெறுவிட்டால்—நமக்கு எங்கேயும் நீதி கிடைக்காது!

இதை உணர்ந்து இனவிடுதலை காண உறுதி கொள் என் தோழா!

—கோவை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்களின் விடுதலைப் போர்

# சனவரி 10-ல் ஆரம்பமாகி விட்டது!



## இதைத் தொடக்கி வைத்தவர்கள் சிங்களவர்களே!

## 35 இலட்சம் தமிழர்கள் ஈழத்தில் எரியும் நெருப்பில்!!

ஆழ்கடலை கடைந்தால் அமுதம் கிடைக்கும் என்பார்கள். அது உண்மையோ, பொய்யோ நான் அறியேன். ஆழ்கடலை கடந்தால் அமுதம் கிடைக்கும் என்பது மட்டும் உண்மை; ஆழ்கடலைக் கடந்து ஈழத்தை அடைந்ததும் எங்களுக்கு கிடைத்த வரவேற்பை என்னென்று சொல்வேன்!

செல்லுமிடமெல்லாம் இளைஞரும் முதியோரும் எம்மைச் சூழ்ந்து கொள்வார்கள்; தமிழ் நாட்டைப் பற்றிய அரசியல் மொழிச் சிக்கல்களைப்பற்றி ஆர்வத்துடன் உசாவுவார்கள்; எம்மிடம் கையெழுத்தும் முகவரியும் பெருதவர்களே இல்லையெனலாம்.

அவ்வெல்லாம் ஒரே விழாக்கோலம். தென்னங்கீற்றுத் தோரணங்கள் யாழ்ப்பாண நகரிலும் அதைச் சுற்றிய சிற்றூர்களிலும் அணி செய்தன. நம்மூர்களில் வாழை மரங்களை நடுவது போலத் தென்னை, பனை, கமுகு மரங்களை வீடுகள் முன்னும் கடைகள் முன்னும் நட்டு வைத்து விழாவெடுத்த காட்சியை வேறெங்கும் காணமுடியாது. எங்கும் தமிழிசை! மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிக் கொண்டிருந்தார்கள்; நாங்கள் அன்பு வெள்ளத்தில் தத்தளித்துக்கொண்டிருந்தோம்.

### விருந்து புறக்கணிப்பு

9.1.74 அன்று இரவு 6.00 மணிக்கு யாழ்ப்பாண மாநகராட்சித்தலைவர் (மேயர்) துரையப்பா அவர்கள் மாநாட்டிற்கு வந்திருந்த வெளிநாட்டுத் தமிழறிஞர்களை ஒரு தேநீர் விருந்துக்கு அழைத்திருந்தார். இலங்கை அரசு வெளிநாட்டுத்தமிழறிஞர்களுக்கு நுழைவாணை மறுத்திருந்தபோது இம்மாநாடுநடைபெறுமாவென்ற ஐயம் நிலவியபோது இதே துரையப்பா மாநகராட்சியின் பொறுப்பிலுள்ள வீரசிங்கம் மண்டபத்தை மாநாட்டு நிகழ்ச்சிகளுக்கு தரமறுத்துவிட்டார் என்றும் பின்னர் திருமதி சிறிமாவோ நுழைவாணை தர ஒப்புக்கொண்டதும் இதே முயல்வதாகவும் இவர் விருந்தை வெளிநாட்டறிஞர்கள் புறக்கணித்தல் வேண்டும் என்றும் மக்களிடையே கருத்து நிலவியதை நாங்கள் அறிந்தோம்; எங்களுக்கும் மக்கள் கருதுவது சரியென்றேபட்டது. எனவே மாநகராட்சித்தலைவர் அளித்த விருந்தில் ஒரு வெளிநாட்டறிஞர் கூட கலந்து கொள்ளவில்லை. இச்செய்தியை எல்லாச் செய்தித்தாள்களும் வெளியிட்டன.

**யாழ்நகரில் நடைபெற்ற 4 வது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வருகை தந்திருந்த சென்னை அழகப்பர் பொறியியற் கல்லூரியைச் சேர்ந்த திரு. இரா. கணேசன் அவர்கள், தாயகம்திரும்பியதும் மாநாடு பற்றி 'மலைச்சாரல்' எனும் ஏட்டில் ஓர் உணர்ச்சி மயமான கட்டுரையைத் தீட்டியுள்ளார். அக்கட்டுரையின் சில முக்கிய பகுதிகள் இங்கு இடம்பெற்றுள்ளன.**

— ஆர்.

துரையப்பா மாநகராட்சியின் பொறுப்பிலுள்ள வீரசிங்கம் மண்டபத்தை மாநாட்டு நிகழ்ச்சிகளுக்கு தர ஒப்புக்கொண்டதாகவும் மாநாட்டு நிகழ்ச்சிகளின் போது இந்தியாவில் வந்து தங்கிக்கொண்டதாகவும் மக்கள் கூறினர்.

மாநாடு இவ்வளவு சிரும் சிறப்புமாக மக்கள் ஒத்துழைப்புடன் நிகழ்ந்தேறியதைக் கண்ட பின்னர் துரையப்பா அவர்கள் இதன் பெருமையில் பங்கு பெற

### 1974 ஜனவரி 10

10.1.74 வியாழன் மாலை 6.00 மணிக்கு வெளிநாட்டுத்தமிழ் அறிஞர்களின் பேச்சைக்கேட்பதற்காகஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. வீரசிங்கம் மண்டபத்தில் கிட்டத்தட்ட ஆயிரம் பேர்தான் இருக்க முடியும். ஆனால் மண்டபத்தின் வெளியே மக்கள் கூட்டம் திரளாக நின்றது. மக்களுணர்ச்சிக்கு மதிப்புத்தர வேண்டி மண்டபத்தின் முற்றத்திற்கு மேடையை மாற்ற வேண்டியதாயிற்று.

மண்டபத்திற்கு இணையாகச் சென்ற சாலையிலும் அதற்கப்பாலிருந்த திறந்த வெளியிலும் கிட்டத்தட்ட ஐம்பதாயிரம் மக்கள் குழுமி நின்றனர். திருச்சியைச் சேர்ந்த திரு. நயினார்முகமது அவர்கள் பேசத்தொடங்கினார். ஓரிரு மணித்துளிகள் தான் பேசியிருப்பார். காவலர் படை மண்டபத்திற்கு எதிரேயிருந்த சாலையில் தம் ஊர்தியில் செல்ல முயன்றது எனவே சிறு சலசலப்பு ஏற்பட்டது. உடனே எத்தகைய முன்னறிவிப்புமின்றி காவலர்கள் கண்ணீர்ப்புகைக்குண்டுகளை வெடிக்கத் தொடங்கி விட்டனர்.

யாழ்ப்பாண வரலாற்றிலேயே இவ்வளவு பெரிய கூட்டம் கூடியது இதுவே முதல்முறை. கண்ணீர்ப் புகைக்குண்டு வெடிக்கப் பட்டதும் இதுவே முதல் முறை. சிறுவரும், சிறுமியரும், தாய்மாரும், நாலா பக்கங்களிலும் சிதறியோடினர். இக்குழப்பத்தில் உயிரிழந்தோரும், உடையிழந்தோரும், உடமையிழந்தோரும் எண்ணிலடங்கார். பலர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் கிட்டத்தட்ட 13 பேர்களைக் காப்பாற்ற முடியாமலே போய் விட்டது.

காவலர்களின் மற்ற வெறிச்செயல்களைப் பற்றி ஏதேதோ பேச்சு என் காதில் விழுந்தது. அவற்றில் உண்மையெது, பொய்யெது என உரைக்க இயலாத நிலையிலுள்ளேன். ஒன்று மட்டும் உறுதியாகக் கூறுவேன். காவலர்கள் தலையிடாமல் இருந்திருந்தால் இப்பொதுக் கூட்டம் மிக அமைதியாக நடந்து முடிந்திருக்கும்.

ஆனால் மறு நாள் இலங்கைச் செய்தி ஏடுகளில் கண்ட செய்தி எவரையும் நாணச் செய்யும். மக்கள் கூட்டம் கட்டுப்பாட்டை மீறியதால் காவலர்கள் கண்ணீர்ப்புகைக்குண்டு வெடித்ததாகவும் கூட்ட நெரிசலில் ஏழுபேர் இறந்து விட்டதாகவும் செய்திகள் கொடுக்கப்பட்டிருந்தன.

11-1-74 அன்று யாழ் நகரே துயரத்தில் மூழ்கிக் கிடந்தது. கடைகள் அனைத்தும் அடைத்துக் கிடந்தன. கறுப்புக்கொடிகள் ஏற்றப்பட்டன. விழாக்கோலம் கொண்டு விழங்கிய யாழ் நகர் இழவுக்கோலம் பூண்டு நின்றது.

### விடுதலை வரலாற்றின் தொடக்கம்

இப்படித்தான் எல்லா விடுதலை வரலாறுகளும் தொடங்குகின்றன. ஈழத்

### இரா. கணேசன்

தமிழர்கள் சிங்களவர் பிடியிலிருந்து விடுதலை பெறத் துடித்து கொண்டிருக்கிறார்கள். மொழியையும் பண்பாட்டையும் வளர்க்க எதையும் இழக்கக் காத்திருக்கிறார்கள்.

சிங்களமொழியை மட்டும் ஆட்சிமொழியாக ஏற்க விரும்பாமல் தங்கள் பதவிகளைத் துறந்ததோடல்லாது சிறையில் கடந்த ஈராண்டு காலமாக விடுதலைப்பண்

(7-ம் பக்கம் பார்க்க)

## எங்கும் வெற்றி வெற்றி என்பதே பேச்சு!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மறத் தமிழ்க் காளையரும் கன்னியரும்.

1956ம் ஆண்டிலிருந்தே வீரமிக்க மன்னார்த் தமிழ் மறவர்களின் குரலாக, மலையக மக்களின் குரலாக, இந்நாட்டுத் தமிழ்பேசும் மக்களின் குரலாக விளங்கியவர் அமரர் திரு. அழகக்கோன் அவர்கள். தமிழரசுக் கோட்டமாக மன்னாரைப் பொலிவுறச் செய்தார் அழகக்கோன்; அவரின் வழியில், ஏனென்று கேட்காமல் தமிழினம் விடுதலை பெறுவதை முக்கிய இலக்காகக் கொண்டு, முன்னணியில் நின்றது இத்தொகுதி.

அழகக்கோனின் அரவணைப்பில் வளர்ந்த மன்னார்த்தொகுதியில் தேர்தல் நடாத்தித்தான் ஆதரவு தேடவேண்டும் என்பதல்ல. எனினும் புதிய அரசியற் திட்டத்தை தமிழ்மக்கள் எதிர்க்கிறார்கள் என்பதை ஆட்சியாளருக்கு உறைப்பாக எடுத்துக்காட்ட திரு. ஜோன் மார்க் பல்லாயிரம் அதிகப்படியான வாக்குகளால் தெரிவுசெய்யப்பட வேண்டும்.

தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எனப் பிரிந்து ஒருவரை யொருவர் திட்டினோம் முந்திய தேர்தல்களில். நாம் இன்று ஒன்றுபட்டுத் தமிழர் கூட்டணியை உருவாக்கிவிட்டோம். தமிழரசுக்கட்சி வேட்பாளரை ஆதரித்து தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளரும், இ.தொ.கா. பொதுச்செயலாளரும் இம்மேடையில் பேசியதை நீங்கள் கேட்டீர்கள். அதே போல இத்தொகுதி மக்களும் குறுகிய பிரதேச வேறுபாடுகளை மத வேறுபாடுகளை மறந்து தமிழினம் வாழவேண்டும் தமிழ்மை பெறவேண்டும் என்ற இலட்சியத்துக்காகப் பாடுபட வேண்டும்.

### பொய்ப்பிரச்சாரம்

மிகக்கேவலமான பொய்ப் பிரசாரங்கள் இங்கு கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதை நான் கேள்விப்பட்டேன். அமரர் அழகக்கோனின் குடும்பத்தினர் தமிழரசுக்கட்சியை எதிர்க்கிறார்கள் என்பது ஒன்று. இது அப்பட்டமான பொய். இதற்கு நாம் பதிலளிக்கத் தேவையில்லை. மேடையில் இருக்கும் அமரர் அழகக்கோனின் உறவினர்களே பதிலாகும்.

மன்னாரில் போட்டியிடும் வேட்பாளரைத் தெரிவுசெய்ய யாழ்ப்பாணக் கட்சிக்கு யாழ்ப்பாணத்தவர்கட்கு என்ன உரிமையுண்டு என்றும் பிரச்சாரம் செய்யப்படுகிறதாம். மன்னார் வாடிவீட்டில் நடந்த வேட்பாளர் தெரிவில் கல்முனை, மட்டக்களப்பு பிரதிநிதிகளும், மூதூர் தங்கத்துரையும் கலந்துகொண்டனர். தமிழரகத் தலைவர் என்றவகையில் நானும், தமிழரசுக்கட்சிச் செயலாளர் என்ற முறையில் திரு. கதிரவேற்பிள்ளையும் அதில் [illegible] கொண்டோம். எனவே வேட்பாளர் தெரிவு யாழ்ப்பாணத்து பா.உ.க்களால் மட்டும் செய்யப்பட்டதல்ல.

இப்பொய்ப் பிரச்சாரத்தை அவிழ்த்துவிடும் பெருமக்களைக் கேட்கிறேன். ஐ.தே.க. வேட்பாளரைத் தெரிவுசெய்தது யார்? ஐ.தே.க.வின் மன்னார் வேட்பாளர் தெரிவுக்குழுவில் எந்தத் தமிழனாவது இடம் பெற்ருரா? வேட்பாளர் தெரிவு கொழும்பில் நடைபெற்றது. ஆனால் தமிழரசு வேட்பாளர் தெரிவு மன்னாரில் வைத்து, மன்னார் மக்களுடன் கலந்துரையாடிய பின்பு, தமிழ்ப்பகுதியின் பல பல பகுதியிலுமிருந்து வந்த தமிழ்ப் பிரதிநிதிகளும் அடங்கிய கூட்டத்தில் மன்னார் மக்களின் முழுச் சம்மதத்துடன் தெரிவுசெய்யப்பட்டது.

ஐ.தே.க. தனது வேட்பாளரை கொழும்பில் தெரிவுசெய்ததைப் பற்றி மௌனம் சாதிப்பவர்கள், தமிழரசுக்கட்சிவேட்பாளர் தெரிவுபற்றி இப்படிச் சொல்கிறார்கள். ஈழத்தமிழினத்தின் ஒற்றுமையை குலைப்பதற்கு இப்படி எத்தனையோ பம்மாத்து வேலைகளில் மாற்றுக்கட்சியினர் ஈடுபடுவார்கள்.

கடந்த 10ந் திகதி திருச்சியைச் சேர்ந்த பேராசிரியர் நயினார் முகம்மது அவர் [illegible] டிருக்கும்போதுதான் அந்த அசம்பாவிதம் நடைபெற்றது. அவர் மதத்தால் ஒரு இஸ்லாமியராக இருந்தும் தமிழ்மொழிமேல் அவர் வைத்துள்ள பற்றும் பாசமும் ஏனைய தமிழரிலும் பார்க்கக்கூடியவை. குண்டாந்தடியால் தாக்கப்பட்டு அல்லோலகல்லோலப் பட்டு ஓடிய மக்கள்கூட தம் கவலையை மறந்து பேராசிரியர் நயினார் முகமதுவின்பேச்சை முழுமையாகக் கேட்கமுடியவில்லையே என்று குறைபட்டுச் சொன்னார்கள்.

அந்த அசம்பாவிதத்தைப் பற்றி, தமிழர்கள் தாக்கப்பட்டது பற்றி இந்த நாட்டின் சிங்கள அரசியல் கட்சிகள் ஏனென்று கேட்கவில்லை. அத்தாக்குதலில் முஸ்லிம் நண்பர்களும் பாதிக்கப்பட்டனர். ஐ.தே.க. இது பற்றி எதுவும் கூறவில்லை. இவர்கள்தான் வெட்கமின்றி தமிழரிடம் வாக்குக் கேட்கிருர்கள்.

அந்த சம்பவம் தமிழினத்தின் ஒற்றுமையை மேலும் வலுப்படுத்திவிட்டது. சம்பவத்தால் பாதிக்கப்பட்டோர் இந்தக் கூட்டத்திலும் இருப்பார்கள். அவர்களைக் கேளுங்கள். நான் நேரடியாக பாதிக்கப்பட்டேன். அதன்பின்பு எந்தவொரு மானமுள்ள தமிழ்பேசும் மகனும் ஐ.தே.கட்சிக்கோ அல்லது அம்மையாரின் கட்சிக்கோ, வாக்களிக்கமாட்டான்.

காங்கேசந்துறைத் தொகுதிக்கு கிடைக்காத பெருமை மன்னாருக்கு கிடைத்துள்ளது. தமிழர்கள் அரசியல் சட்டத்தை எதிர்க்கிருர்கள் என்பதைக்காட்ட, தம் பதவியைத் துறந்துபோட்டியிட முன்வந்தார் தந்தை செல்வா. முதுகெலும்பற்ற அரசு சாக்குப் போக்குச் சொல்லித் தேர்தலை நடத்தாமல், தட்டிக்கழிக்கிறது. ஆனால் மன்னாரில் தேர்தல் வந்துவிட்டது. புதுஅரசியல் சட்டத்தை எதிர்க்கின்ற பெருமை மன்னார் மக்களுக்கே முதலில் கிடைக்கிறது.

புதிய அரசியல் சட்டத்தை ஜனநாயக முறைப்படி எதிர்த்து ஈழத்தமிழினத்துக்கு வழிகாட்டியாக விளங்க மன்னார்த் தொகுதி மக்கள் தயாராகிவிட்டார்கள். தமிழினத்தின் விடிவெள்ளி மன்னாரில் உதயமாகிவிட்டது. நிச்சயமாக திரு. யோன்மார்க அவர்கள் பல்லாயிரக்கணக்கான அதிகப்படியான வாக்குகள்பெற்று தமிழினத்தின் ஒற்றுமையை உலகுக்குக் காட்டுவார்.

இறுதியாக வேட்பாளர் திரு. யோன்மார்க் தமிழ் வாழ, தமிழினம் வாழ தான் ஒரு தொண்டனாக நின்று பணியாற்றுவதாகக் குறிப்பிட்டார். மன்னார் மக்கள் வேறுபாடுகளை மறந்து முஸ்லிமாக இருந்தாலும் எல்லோரும் தமிழ்பேசும் மக்களாக, அவலவர்களாக கருதி, தமிழர் கூட்டணி சார்பில் தமிழரசுக்கட்சி இத்தேர்தலில் வெற்றிபெறச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துரையப்பாவின் தடுமாற்றம்!

ஜனவரி 3ம் திகதி தொடக்கம் 9ம் திகதிவரை திறந்த வெளியரங்கை பாவிப்பதற்கு அனுமதி கேட்டிருந்தார்கள். 10ம் திகதி அதனைப் பாவிப்பதற்கு அனுமதி கேட்கவில்லை. கேட்டிருந்தால் 10ம் திகதியல்ல, மேலும் ஒரு கிழமைக்கும் கொடுத்திருப்பேன்—

—யாழ்மேயர் துரையப்பா
(தினகரன் 17-1-74)

10ந் திகதியும் திறந்த வெளியரங்கை பயன்படுத்துவதற்கு முன்கூட்டியே அனுமதி பெற்றிருந்தும் கூட்டத்தை முதலில் வீரசிங்கம் மண்டபத்திலும் பின்னர் மண்டபத்துக்கு முன்னாலும் வைத்தது ஏன்?

—யாழ்மேயர் துரையப்பா
(தினபதி 7-2-74)

—

## பாடசாலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் இதுபோல் இதற்கு முன்னர் நடைபெற்றதில்லையென்னும்படி யாருடைய தூண்டுதலுமின்றியே மாணவர்கள் இப்பகிஷ்கார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

தமிழ் இளைஞர் பேரவையின் வேண்டுகோட்படி இப்பாடசாலைப் பகிஷ்கரிப்பு நடைபெற்றது.

மட்டக்களப்பு, வவுனியா, மன்னார், மாவட்டங்களிலும் பாடசாலைப் பகிஷ்கரிப்பு வெற்றிகரமாக நடைபெற்றது.

### மாணவர்கள் முள்ளியவளையில் பகிஷ்கரிப்பு

முள்ளியவளை, முல்லைத்தீவு, தண்ணீரூற்றுப் பாடசாலைகள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த போதிலும், வவுனியாத் தொகுதியின் பிரபல்யம் வாய்ந்த பாடசாலையான முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் அன்றைய வரவை உயர்வகுப்பைச் சேர்ந்த ஒரே ஒரு மாணவன் மட்டும் (பெயரில் தமிழன்) பூர்த்தி செய்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

வித்தியானந்தாவின் வெளி வாசலில் பிரமாண்டமான கறுத்தக்கொடி ஒன்று பறந்தவண்ணமிருந்தது. அதைச் சில எட்டப்பர் கூட்டத்து ஆசிரியர்கள் அகற்ற முயன்று தோல்வி கண்டனர், மாணவரின் உணர்ச்சி, வெற்றிகண்டது.

யாழ் குருநகர் சென் ஜேம்ஸ் மகாவித்தியாலய மாணவர்களும், மகளிர் கல்லூரி மாணவிகளும் குருநகரில் அமைந்திருக்கும் யாழ் மீன்பிடிப் பயிற்சிக் கல்லூரி மாணவர்களும் அன்றையதினம் பாடசாலையைப் பகிஷ்கரித்தனர்.

மீன்பிடிப் பயிற்சிக்கல்லூரியில் ஒருவர் மட்டுமே சமூகம் கொடுத்திருந்தார். மற்றைய கல்லூரிகளில் ஒருவருமே இல்லாது வகுப்புகள் வெறிச்சோடிக்கிடந்தன.

மறுநாள் நடந்த துக்க தினத்தன்று குருநகர்ப்பகுதியில் ஒருசில தேனீர்ச்சாலைகளும் துரோகக் கும்பலின் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் திறந்திருந்தன.

மற்றைய கடைகள் எல் மூடப்பட்டுக் கிடந்தது.

குருநகரின் முக்கிய பகுதியான சின்னக்கடைச் சந்தைப்பகுதியில் ஒருகடை கூடத் திறந்திருக்கவில்லை.

மரக்கறி, மீன் வியாபாரிகளில் 95 வீதமானோர் வியாபாரத்திற்குச் செல்லவில்லை அதனால் குருநகர் எங்கணும் வெறிச்சோடிக் கிடந்தது.

# ஒத்துழையாமை இயக்கம் திருகோணமலையில் பூரண வெற்றி!

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளில் கொல்லப்பட்ட தமிழர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும் — பொலிசாரின் மிருகத்தனமான தாக்குதலைக் கண்டித்தும் தன்மானத் தமிழர் கோட்டமாம் திருக்கோணமலையில் பெப்ரவரி 8, 9 ஆகிய இரு நாட்களும் பூரண துக்க தினம் அனுட்டிக்கப்பட்டது.

கடைகள், வர்த்தக நிலையங்கள், உணவு விடுதிகள், சிற்றுண்டிச் சாலைகள் அனைத்தும் இரண்டு நாட்களாக மூடிக்கிடந்ததுடன், மக்கள் நடமாட்டமில்லாததால் தெருக்கள் வெறிச்சோடிக் கிடந்தன.

திருகோணமலை பா. உ: திரு. நேமிநாதன், மூதூர் பா. உ. திரு. அ. தங்கத்துரை ஆகியோரின் இல்லங்களில் கறுப்புக்கொடிகளுடன் தமிழர் கூட்டணியின் உதயசூரியன் கொடியும் இணைந்து பறக்க காணப்பட்டன.

திருகோணமலையின் பிரபல பாடசாலைகளான இந்துக் கல்லூரி, சண்முக வித்தியாலயம், அர்ச் சேவியர் தமிழ்க் கலவன் பாடசாலை, விக்னேஸ்வர வித்தியாலயம் சென். மேரிஸ் கல்லூரி, சென். ஜோசப் கல்லூரி போன்ற கல்லூரிகள் அனைத்தும் மாணவர் பகிஷ்கரிப்பினால் 8ம் திகதி வெறிச்சோடிக் கிடந்தன.

குச்சவெளி, நிலாவெளி கும்புறுப்பிட்டி, சாம்பல்தீவு உப்புவெளி, மூதூர், தம்பலகாமம், கிளிவெட்டி ஆலங்கேணி ஈச்சிலம்பத்தை ஆகிய இடங்களிலும் பாடசாலைப் பகிஷ்கரிப்பு நூற்றுக்கு நூறு வீதம் வெற்றி பெற்றது.

இ. போ. ச. பஸ்களையும் மக்கள் புறக்கணித்ததால் அவையும் வெறுமனே ஓடிக்கொண்டிருக்க காணப்பட்டன.

ஹர்த்தால் பற்றி நமது திருகோணமலை நிருபர் கோணேஸ்வரன் மேலும் எழுதுவதாவது:-

தங்கத் தமிழ் மண்ணும் திருக்கோணமலை 8-2-1974 அன்று சிங்கத் தமிழ் இளைஞரின் பேரவையினால் தமிழர் கூட்டணியினரினது ஆதரவுடன் நடத்தப்பட்ட ஒத்துழையாமை இயக்கம் திட்டமிட்டவர்களையே திகைக்க வைக்கும் வெற்றிவரலாற்றை எழுதிவிட்டது.

பெட்டிக் கடை தொடக்கம் பெரும் பொறிக் கடை வரைக்கும், வெற்றிலைக் கடைதொட்டு வெளிநாட்டு நாகரிகக் கடைவரைக்கும் இறுக்கமாக மூடப்பட்டிருந்தன. அரசாங்க சேவையின் பேரில் நடமாடிய அரச ஊழியர்களையும் அசம்பாவிதங்கள் நடக்கும் எமக்கும் இரை கிடைக்கும் என்று அலைந்து ஏமாந்த ஏவற் படைகளையுந்தவிர, தமது திட்டத்தின் வெற்றியை மதிப்பிட முயன்று அங்கொருவர் இங்கொருவராக நடமாடிய இளைஞர் பேரவை உறுப்பினர்களை மட்டுமே தெருக்களிற் காண முடிந்தது ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டதோ எனுமளவுக்கு தெருக்களெல்லாம் வெறிச்சோடிக் கிடந்தன.

வழமையான போராட்டக் கருவியான கறுப்புக் கொடிகள் நகரத்தில் பெருமளவு காணப்படவில்லை. அரைக்கம்பத்திற் பறக்க விடப்பட்ட உதய சூரியன் கொடிகளையும் கறுப்புக் கொடிகளையும் ஒரு சில இல்லங்களில் மட்டுமே காண முடிந்தது.

இது பற்றி விசாரிக்கையில் "அடிமை இருளில் வாழும் நாம் இருள் — கொடிகளை ஏற்றினால் யார் கண்களில் அது தென்படும்?" கறுப்புக் கொடி பிடிக்கும் கரங்களில் கைத்துப்பாக்கிகள் உயரட்டும்" என்று எம் தலைவர்கள் ஆணையிடும் நாள் இன்னும் வரவில்லையே!" என்ற உணர்ச்சிக் குமுறலான பதிலே எம் இளஞ் சிங்கங்களிடமிருந்து கிடைத்தது.

### நேமிநாதன் முழக்கம்

"சோற்றுப் பிறவிகளான தமிழர் இப்போது இத்தகைய உற்சாகத்துடன் உணர்ச்சிப் பிழம்பாக நிற்கின்றார்களென்றால் அது நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் விளைவேயாம் இந்த உணர்ச்சியானது நீடித்து தமிழரின் விடுதலை விரைவிற் கிடைக்கட்டும். மார்ட்டின், அருளம்பலம், துரையப்பா, தியாகராசா போன்றோரின் வாரிசுகள் இச் சந்தர்ப்பத்திலாவது உணர்ச்சியடையட்டும்'

இவ்வாறு 9-2-1974ல் ஒத்துழையாமை இயக்கத்தின் ஓரங்கமாக நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் திருக்கோணமலை பா. உ. திரு. பா. நேமிநாதன் பேசினார்.

திருக்கோணமலை முற்றவெளியில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு பொலிசார் அனுமதியளிக்காத போதும் ஒலிபெருக்கியின்றி கூட்டம் நடத்தப்பட்டது. பெருந்திரளான மக்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் கூட்டத்தில் கலந்தனரெனினும், ஆயுத பாணிகளாகக் குவிக்கப்பட்டிருந்த ஏவற் படையினருக்கு எவ்விதத் தீனியும் கிடைக்காதது அவர்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்தது.

மூதூர் முத்து தங்கத்துரை கனக தாமோதரம் பிள்ளை திருமதி. பிலோமினா லோறன்ஸ், வண பிதா யோசப் மேரி, வழக்கறிஞர் துரைநாயகம் போன்ற இன்னும் பலர் மேற்படி கூட்டத்தில் உணர்ச்சிகரமாகப் பேசினார்கள்.

பி.ப. 4 மணிக்கு பிரதான வீதியில் மூதூர் முத்து அ. தங்கத்துரை பா. உ. அவர்கள் இளைஞர் பேரவை அலுவலகத்தை சம்பிரதாயப்படி திறந்து வைத்தார்.

9-2-1974 அன்று திருக்கோணமலையில் உள்ள அத்தனை படமாளிகைகளும் படக்காட்சிகளை ரத்து செய்து இளைஞர்களின் உணர்ச்சிக்கு ஊக்கமளித்தது குறிப்பிடத்தக்கது.

## இ. தொ. கழக தொழிலாளர் அனுதாபம்!

கடந்த 10. 1. 1974 யாழ் நகரில் நடைபெற்ற பொலிஸ் தாக்குதலின் விளைவாக உயிர்நீத்த 9 பேருக்கு அனுதாபம் காட்டும் முகமாகவும் பொலிஸ் இவ்வாறு கொடுமை தனமாக நடந்து கொண்டமையை கண்டித்தும், மலைநாட்டில் அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கீழ் இயங்கும் இலங்கைத் தொழிலாளர் கழக உறுப்பினர்கள் தங்கள் ஆழ்ந்த கவலையை தெரிவிக்கும் முகமாக 9. 2. 1974 வேலைகளுக்கு செல்லாமல் வீட்டில் இருந்து அனுதாபம் தெரிவித்தனர்.

— மேற்கண்டவாறு சுதந்திரனுக்கு அளித்த அறிக்கையில் இ. தொ. கழக பொதுச் செயலாளர் திரு. மு. பரராஜசிங்கம் கூறியுள்ளார்.

—

## சென்னையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போது நடந்த சம்பவங்கள் பற்றிய விளக்கமான செய்திகள், புகைப்படங்கள், இதுவரை நடைபெற்ற தமிழர் விடுதலைப்போராட்ட வரலாறுகள், அதுபற்றிய செய்திப்படங்கள், உலகசெய்தித்தாள்களில் ஈழத் தமிழர் போராட்டம் பற்றி வெளிவந்த செய்திகள் போன்ற பல அம்சங்களும், இக்கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன. தந்தை செல்வா தமிழகத் தலைவர்களைச் சந்தித்தது பற்றிய புகைப்படங்கள் செய்திகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

இக்கண்காட்சியில் இலங்கைத் தமிழர்களின் தனிக் கொடியாகிய உதயசூரியன் கொடியும் இடம்பெற்றிருக்கிறது.

## அறிவகத்தின் கட்டுரைப் போட்டி

அறிவகத்தினர் நடத்தும் மாணவருக்கிடையிலான 'வள்ளுவம்' கட்டுரைப் போட்டிக்கான கட்டுரைகள் [illegible] இறுதி நாள் 17—2—74 என அறிவகத்தினர் அறிவிக்கின்றனர்.

## ஈழத் தமிழர்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடிக்கொண்டிருக்கின்றனர், காசி, ஆனந்தனும் மற்றும் அவர்போன்ற நாற்பத்திரண்டு இளைஞர்களும்.

10-1-74 அன்று இரவு ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டம் தொடங்கி விட்டது. அதை தொடங்கி வைத்தவர்கள் சிங்களவர்களே!

இலங்கையைச் சுற்றிப் பார்க்கும் திட்டத்தைக் கைவிட்டோம். 11-1-74 அன்றைய வானூர்தியில் கொடுமுடி ச. சண்முகமும் துணைவியும் தாயகம் திரும்பினர். 12-1-74 அன்றைய வானூர்தியில் நானும் புலவர் இராசுவும் தாயகம் திரும்பினோம். திரும்பிப் பார்க்கிறோம். 35 இலட்சம் ஈழத்தமிழர்கள் தாய்த்தமிழகத்தை நோக்கி அணி வகுத்து நின்று கொண்டுள்ளனர். நாம் 35 இலட்சம் உறவினர்களை எரி நெருப்பில் நிறுத்திவிட்டு வந்திருக்கிறோம் என்ற உணர்வுதான் நெஞ்சமெல்லாம் நிரம்பி இருக்கிறது".

—

## இளந்தமிழர் ஆண்டு விழா

புங்குடுதீவு இளந்தமிழர் மன்ற எட்டாவது ஆண்டு நிறைவு விழா இம்மாதம் 20ந் திகதி ஊரதீவிலுள்ள வன்னியசிங்கம் அரங்கில் மன்றத்தலைவரும் சட்டக் கல்லூரி மாணவருமான திரு எஸ். கே. மகேந்திரன் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

## இலங்கைத்...

(1-ம் பக்கத் தொடர்ச்)

பாராட்டாததற்காக நான் வருத்தப்படவில்லை. பாராட்டப்படவேண்டியது பண்பு என்ற அளவில் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள்.

அந்தப் பண்பின் அடிப்படையிலேயும், அரசியல் மரபுகள், அரசியல் நாகரிகம் என்ற அடிப்படையிலும் இலங்கையினுடைய பிரதமர் இந்தியாவிற்கு வருகிற நேரத்தில் நான் வரவேற்க வேண்டிய கடமைப்பட்டவன் என்ற அளவிலே வரவேற்றேன்.

அப்படி வரவேற்கிற அதே நேரத்தில் நம்முடைய உணர்ச்சிகளை நம்முடைய பிரச்சினைகளை— தமிழர்களுக்கு இலங்கையிலே ஏதாவது கொடுமைகள் இழைக்கப் பட்டால் அதைக் கண்டிக்கின்ற நெஞ்சத்தின் அழுத்தங்களை நிச்சயமாக நான் மறந்துவிடவில்லை என்பதையும் இங்கே சுட்டிக் காட்டப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

அழகு

"மனிதனின் அழகு அவனது நற் குணத்தில் அமைகிறதே அன்றி அவனது உடற்கட்டில் இல்லை."

— மகாத்மாகாந்தி.

15 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி படிப்பினை என்ற புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77, யாழ்ப்பாணம்.

நங்கையர் விரும்புவது
நம்பியர் நாடுவது
பெரியவர்கள் வேண்டுவது
"சீதா"
முகப்பவுடர்
பூவகை அத்தர்களால்
நறுமணம் ஊட்டப்பெற்றது
"சீதா" முகப்பவுடர்
கவர்ச்சியூட்டுவது நறுமணம் கமழ்வது
அழகுடன் பொலிவுறச் செய்வது
"சீதா" முகப்பவுடர்
சீதா தொழிலகம்
71, குமார வீதி, புறக்கோட்டை,
கொழும்பு-11. தொ. பே. [illegible]
இதற்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்கு ஏக விநியோகஸ்தர்கள் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஈழத் தமிழினம் விடுதலை பெறும் காலம் அண்மித்துவிட்டது!"

## கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில் பேராசிரியர் வித்தியானந்தன் முழக்கம்!

"ஈழத் தமிழினத்தின் விடுதலைப் போராட்டம் சனவரி 10ம் திகதி இரவே ஆரம்பமாகிவிட்டது. அன்றைய தினம், தமிழின் சுவை கேட்க வந்த ஒன்பது தமிழர்களை தமிழ்த்தாய் களபலியாகத் தந்து விட்டாள். இன்னும் தமிழ் விடுதலைப் போரில் எவ்வளவு பெரிய தியாகங்களை தமிழினம் செய்ய வேண்டியேற்படுமோ தெரியாது. ஆனுல் எத்தகைய தியாகத்துக்கும் தமிழ் மக்கள் தயாராகி விட்டார்கள். தமிழினம் மீட்சி பெறும் காலம் அண்மித்து விட்டது."

—இவ்வாறு பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் 9. 2. 74ல் இந்து இளைஞர் பேரவையினரால் நடத்தப்பட்ட தமிழ்த்தியாகிகள் நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உணர்ச்சி ததும்பப் பேசிய அனைத்துலக தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் தலைவர் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் முழக்கமிட்டார்.

கடந்த சனவரி 10ம் நாள் இரவு நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் பொதுக்கூட்டத்தின் போது பொலிசார் நடத்திய மிருகத்தனமான தாக்குதலின் விளைவாக கொல்லப்பட்ட தமிழர்களின் நினைவாக இந்த அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது.

பொலிசார் ஒலிபெருக்கி உபயோகிக்க அனுமதி மறுத்ததன் காரணமாக ஒலிபெருக்கியின்றியே நடைபெற்ற இக்கூட்டத்தில் ஏராளமான தமிழ் மக்கள் கலந்துகொண்டனர்.

கூட்டம் தொடங்குவதற்கு முன்னர் இறந்த தமிழர்களின் ஆத்மசாந்திக்காக மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் விசேட பூசை நடைபெற்றது. கூட்டம் பிரார்த்தனையுடன் ஆரம்பமாயிற்று.

"கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக; அருள் மலிந்த நன்மார்க்கர் ஆள்க! எனும் வள்ளவார் பாடல் உணர்ச்சியுடன் இந்தப் பிரார்த்தனையின் போது பாடப்பட்டது.

திரு. வி. கே. கந்தசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் மேலும் பேசியதாவது:—

"ஓடையிலே என் சாம்பல் ஓடும் போதும், ஒண்தமிழே சலசலத்து ஓடவேண்டும்; சாகும்போதும் தமிழ் படித்துச்சாக வேண்டும்; என்ற இன உணர்வுடன், ஆர்வப் பெருக்குடன் அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்துகொண்ட தமிழர்கள் சிலர் மிருக வெறியர்களின் தாக்குதலின் விளைவாக கொல்லப்பட்டனர். அந்த தமிழர்களை நினைவு கூருவதற்காக நாம் இங்கே கூடியிருக்கிறோம். அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு, இதுவரை வேறு எங்குமே நடைபெருத அளவில் யாழ் நகரில் சிறப்புற நடைபெற்றும், அந்த வெற்றியைக் கொண்டாட வேண்டிய நாளில், துக்கத்தை அனுட்டிக்க வேண்டிய நிலைமையை சிலர் ஏற்படுத்தி விட்டார்கள்.

"யாழ் குடாநாடு எங்கும் சென்று 'தமிழ் வாழ்க, வெல்க' என்று முழக்கமிட்டு தமிழ் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்த வெளிநாட்டறிஞர்களை—தடைகள் பல போடப்பட்டும் மனம் தளராது, தமிழ் மீது கொண்ட பற்ருல் அவற்றை உடைத்தெறிந்து இங்கு வந்து சேர்ந்த வெளிநாட்டறிஞர்களை—தமிழ்த் துரோகியின் மாநகர விருந்தை ஏற்க மாட்டோம் என்று அறிவித்து அதைப் பகிஷ்கரித்த வெளிநாட்டறிஞர்களை—மாநாட்டுக் கருத்தரங்குகளில் ஏழு நாட்களாகத் தமிழாய்ந்து, தமிழன்னைக்கு புகழ் சேர்த்த வெளிநாட்டறிஞர்களை—நேரில் பார்க்கவும் அவர்கள் பேச்சைக் கேட்கவும், அவர்களுக்கு நன்றி தெரிவிக்கவும், கடந்த சனவரி 10ம் திகதி யாழ் வீரசிங்கப் மண்டபத்தின் முன்னல் திரண்டிருந்த சுமார் 80,000க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் மீது—எதுவித முன்னறிவித்தலுமின்றி—எதுவித காரணமுமின்றி—எதுவித எச்சரிக்கையுமின்றி—மிருகத்தனமான முறையில் கோழைத்தனமான முறையில் பொலிசார் தாக்குதல் நடத்தினர். [illegible] குழந்தைகள் வயோதிபர் [illegible] வெளிநாட்டறிஞர்கள்



என [illegible]மின்றி தமிழ் மக்களை வெறித்தனமாக தாக்கினர்கள்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பளிப்பதற்காக மாநாட்டு மண்டபத்துக்குள் நுழைவதற்கு தங்களுக்கு அனுமதிச்சீட்டு வேண்டும் என்று வாங்கி வைத்திருந்தனர் பொலிசார்—அப்படிப்பட்ட அவர்கள் இறுதிநாளில் பாதுகாப்புத்தர வேண்டியதையும் மறந்து பகைவர்களாக மாறி, தமிழ் மக்களையும், வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும் தாக்கினர்கள். வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் பொதுமக்களுக்கும் தமிழ் இளைஞர்களே பாதுகாப்புத்தர நேரிட்டது.

இந்த வெறித்தாக்குதலின் விளைவாக இறந்த தமிழர்கள் கோழைத்தனமாக கொல்லப்பட்டிருக்கின்றனர். அந்தத் தமிழர்களுக்கு எதிர்த்து நின்று போராடுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. விடுதலைப் போராட்டம் நடத்த வாய்ப்புஅளிக்கப்படவில்லை.

தமிழுக்காக தங்கள் உயிரை கொடுத்த அந்தத் தமிழ்த்தியாகிகளின் இறுதி யாத்திரைகள் சிலவற்றில் நான் கலந்துகொண்டேன். அப்போது மக்களின் விடுதலை உணர்ச்சியைக் கண்டு உள்ளம் சிலிர்த்தேன். இறந்த ஒரு தமிழ் இளைஞரின் மைத்துனர், மயானத்திலேயே வைத்து என்னிடம் கேட்டார—"சேர், தமிழர் விடுதலைக்காகவே நான் என்னென்ன செய்ய வேண்டும்; என்னென்ன பலி தரவேண்டும்; சொல்லுங்கள் செய்யத் தயாராக இருக்கிறேம்" என்று.

"இது எனக்கு 1958-ம் ஆண்டு இனக்கலவரத்தின் போது நடைபெற்ற நிகழ்ச்சியொன்றை நினைவுக்கு கொண்டுவந்தது. அந்தக் கலவரத்தின்போது கல்லோயாப்பகுதியில் வாழ்ந்து வந்த ஒரு தமிழ் குடும்பம் பூண்டோடு அழிக்கப்பட்டது. குடும்பத்தின் தலைவி மட்டுமே தப்பியிருந்தாள். அவள் மிகவும் சோகத்தோடு இருந்ததைக் கண்டவர்கள் அவளுக்கு ஆறுதல் கூறினர்கள். அப்போது அந்தத் தமிழச்சி கூறினுள்—"நான் எனது குடும்பம் முழுவதும் கொல்லப்பட்டது. குறித்து கவலைப்படவில்லை; தமிழர் விடுதலை போருக்கு மேலும் தருவதற்கு எனக்கு பிள்ளைகள் இல்லையே என்றே கவலைப்படுவதாக தெரிவித்தாள்.

அந்த அளவுக்கு தமிழின எழுச்சியை, விடுதலை உணர்வை நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு ஏற்படுத்தி வைத்திருக்கிறது.

ஆங்கிலேய ஆட்சி அகன்று ஈழத்தமிழர்கள் சிங்களவர்களுக்கு அடிமைகளாக்கப்பட்ட பின்னர்—இதற்குமுன்னர் முன் எப்போதும் ஏற்படாத தமிழ் விடுதலை உணர்வை, அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு இன்று ஏற்படுத்தி யிருக்கிறது.

இத்தகைய மாநாட்டைத் தான் கொழும்பில நடத்த வேண்டும் என்று சிலர் வற்புறுத்தினர்கள் — இப்போதும் கூட கூறுகிருர்கள் நடத்தியிருந்தால் பத்து இலட்சம் ரூபா செலவு செய்திருப்போம் என்று. நாம் அவர்களிடமிருந்து பத்து இலட்சம் அல்ல— பத்துப் பைசா கூட வாங்கத் தயாராக இல்லை. "எமைநத்துவாயென எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்" என்பதே எமது கொள்கையாகும். தமிழின் பகைவர்கள் தரும் ஒரு சதமும் எமக்கு வேண்டாம! தந்தாலும் வாங்க நாம் தயாராக இல்லை!

தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வெளிநாட்டறிஞர்கள் வருவதற்கு விசா வழங்கும்படி கேட்டு நாம் பாதுகாப்பு வெளிவிவகார துணை அமைச்சரைச் சந்தித்தபோது — மாநாட்டை கொழும்பில் நடத்தினுல் மட்டுமே ஆதரவு தருவோம்; யாழ்ப்பாணத்தில் நடத்தக்கூடாது; கொழும்பில் நடத்தினுல், பண்டாரநாயக ஞாபகார்த்த மண்டபத்தை தருவோம் மாநாட்டில் பேசுவதற்கு ஐந்தாறு மந்திரிகளையும் தருவோம் எல்லா உதவியும் செய்வோம் என்று கூறினுர்கள்.

மாநாட்டை கொழும்பில் நடத்தும்படி அவர்கள் கேட்டதன் பொருள் அப்போது தான் எனக்குப் புரிந்தது. அரசியல் கலப்பின்றி மாநாட்டை நடத்த நாம் விரும்பினேம். ஆனுல் அரசும், அரசின் ஆதரவாளர்களான சில தமிழர்களும் அந்த மாநாட்டை கொழும்பில் நடத்துவதன் மூலம் அமைச்

(9-ம் பக்கம் பார்க்க)

## ஒரு இனத்துக்கு ஒரு நீதி!

"கடந்த திங்களன்று (4.2.74) மாலை ஹைட்பார்க்கில் நடைபெற்ற ஐ. தே. கட்சிப் பொதுக்கூட்டம் சத்தியாக்கிரகம் ஆகியவற்றின் பின்னர் நடைபெற்ற கல்லெறிச் சம்பவத்தில் இரு. இ. போ. ச. பஸ்கள் சேதமுற்றன." —தினகரன் (6. 2.74)

"ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் வேண்டுகோளின்பேரில் ஆயிரக்கணக்கான மக்கள் திடீர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டதால் ஹைட்பார்க் சந்தியில் போக்குவரத்துக்கள் யாவும் நேற்று முன்தினம் (4.2.74) பத்து நிமிடம் ஸ்தம்பித்துப் போய் நின்றன. பெருந்திரளான மக்கள் பாதையில் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்தனர்." —தினபதி(6 2.74)

ஃ ஃ

—மேற்படி இரண்டு செய்திகளையும் படித்தீர்களா?

பஸ்கள் இரண்டு சேதமுற்றன; போக்குவரத்துக்கு குந்தகம் ஏற்படுத்தி — பாதைகளில் சத்தியாக்கிரகம் நடைபெற்றிருக்கிறது.

ஆனுல்—இவையெல்லாம் நடந்தும்—

பொலிசார் தங்கள் "கடமையை" மறந்து என்ன செய்தார்களோ தெரியாது!

குண்டாந்தடியடியோ, கண்ணீர்ப்புகைப் பிரயோகமோ — துப்பாக்கிப்பிடியால் அடியோ — துப்பாக்கிச்சூடோ — எதுவும் அங்கு இடம்பெறவில்லை!

பொலிசார் அந்தப் பக்கமே தலைவைத்துப்படுக்கவில்லை.

அதே நேரத்தில் — யாழ்ப்பாணத்தில் நடந்தது என்ன?

—பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் யாழ் வீரசிங்கம் மண்டபம் எதிரே திரண்டனர் கடந்த சனவரி 10ம் திகதி!

அரசாங்கத்தை எதிர்த்து சத்தியாக்கிரகம் செய்ய அவர்கள் அங்கு திரளவில்லை!

'தனிநாடு' பிரகடனப்படுத்த அவர்கள் அங்கே கூடவில்லை!

அவர்கள் கூடியது — தங்கள் மொழி கலாசாரம் சம்பந்தப்பட்ட விழாவில் வெளிநாட்டு அறிஞர்களின் பேச்சை கேட்பதற்காக!!

அமைதியாக கூடியிருந்த அந்த மக்கள் கூட்டத்தின் மீது தான் சட்டவிரோதமாக கூடியதாக குண்டாந்தடியடி! கண்ணீர்ப்புகைக்குண்டு வீச்சு! இடி! உதை!!

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் கூடியது மட்டும்—சட்டவிரோதமாகவும், போக்குவரத்தைத் தடை செய்வதாகவும் தெரிந்திருக்கிறது பொலிசார் கண்களில்!

ஆனுல் கொழும்பில் — சிங்களக்கட்சியொன்றின் தலைமையில் சிங்களவர்கள் கூடி — போக்குவரத்தைத் தடைசெய்து தெருக்களில் சத்தியாக்கிரகம் செய்தது—ஒன்றுக்கு இரண்டு பஸ் வண்டிகளுக்கு கல்லெறிந்து சேதப்படுத்தியது — மட்டும் சட்டவிரோதமாகபடவில்லை பொலிசார் கண்களில்!!

ஆம், தமிழனுக்கு ஒரு நீதி! சிங்களவனுக்கு ஒரு நீதி!

தமிழ் ஈழத்துக்கு ஒரு நீதி! சிங்களத்துக்கு இன்னொரு நீதி!!

இதற்குக் காரணம் — என்ன?

தமிழன் ஆளப்படும் இனத்தினன்; சிங்களவன் ஆளும் இனத்தவன்!!

இந்நிலை மாறி—தமிழனும் தன்னைத்தானே ஆளும் இனத்தினனுக வாழ்வதற்கு தனியரசு காணும்வரை—ஈழத் தமிழனுக்கு இந்நாட்டில் அடியும் உதையுமே கிடைக்கும்!

ஈழத் தமிழா! இதைப் புரிந்துகொள்! விடுதலைக்குப் போராட விரைந்துவா!

—கோவை

## தமிழ்ப் பயிரை அழித்துவிட...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டான், நாளை அமையப்போகும் ஈழத்தமிழ் நாட்டின் அந்நிய செலாவணியை அள்ளித்தரப் போவது மன்னர் மண்ணே! இந்நிலையில் மன்னர் மண்ணை மாற்ருர் கையில் போக விடாது பாதுகாத்திடுவது ஒவ்வொரு தமிழ்பேசும் மகனதும் புனித கடமையாகும்!

எனவே அந்த மண்ணில் புகுந்து தமிழ்ப் பயிரை நாசம் செய்திட முயலும் சிங்களக் காட்டு யானையை வாக்குச்சீட்டு எனும் துப்பாக்கி கொண்டு இத்திங்கள் 25ம் நாள் சுட்டுப் பொசுக்கி தமிழர் கூட்டணியின் உதய சூரியன் சுதந்திரக் கொடியை உயரப் பறக்கவிடுவார்கள் தன்மான உணர்வுள்ள மன்னரின் தங்கங்கள் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்ப்போம்!!

உன் அன்புத் தோழன்

கோவை மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் எழுந்த தமிழோசை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குப்பை கூளங்களை கரை மீறிப்பாயும் இந்தத் தமிழுணர்ச்சி எனும் வெள்ளம் அடித்துச்சென்றுவிடும்! இது நிச்சயம் மன்னா நிச்சயம்!'

நான் இவ்வாறு சங்கிலி மன்னனுக்கு 'லெக்சர்' அடித்துக் கொண்டிருந்தபோது மீண்டும் தமிழ் முழக்கங்கள் எழுந்தன! புலி, வில், மீன் கொடிகள் பறப்பது தெரிந்தது! அடடா! சேரனும், சோழனும், பாண்டியனும் ஒருவருடன் ஒருவர் கை கோத்தபடி அங்கு வந்து கொண்டிருந்தார்கள்!

எனக்கு ஆச்சரியத்தால் விழிகள் அகலத் திறந்தன.

இவர்கள் தங்களுக்குள் ஒருவருடன் ஒருவர் மோதிக்கொண்டு — போரிட்டுக்கொண்டு — இருந்தவர்களாயிற்றே எப்படி ஒன்று பட்டார்கள் என்பதே என் ஆச்சரியத்துக்கு காரணம்!

'வாருங்கள் மூவேந்தர்களே! நீங்கள் தமிழாராய்ச்சி மாநாடு கண்டிட எங்கள் யாழ் நகர் வந்ததில் மகிழ்ச்சி! இதோ உங்களை வரவேற்க இலங்கேஸ்வரனும், சங்கிலி மன்னனும் ஏற்கெனவே வந்து விட்டார்கள். அது சரி, எனக்கொரு சந்தேகம். நீங்கள் தான் ஒருவருடன் ஒருவர் சண்டையிடுவீர்களே! ஏது திடீரென்று இப்படி ஒன்று பட்டுவிட்டீர்கள்?' என்று கேட்டு விட்டேன்!

மூவேந்தர்கள் ஒரு வெற்றிச் சிரிப்பு சிரித்து விட்டு— 'நாங்கள் எங்களுக்குள் சண்டை போட்டுக்கொண்டாலும், நாம் மூவருமே தமிழ்த்தாயின் பிள்ளைகள் அல்லவா! எனவே தாயின் பெருமையை கேட்க—தமிழ்தாய் யாழ்நகரில் கொலுவீற்றிருக்கும் அழகைக் கண்டிட — நாம் ஒற்றுமையாக கைகோத்து வந்திருக்கிறோம். அது மட்டுமல்ல— ஈழத்தமிழர்களின் ஒற்றுமை உணர்வையும் மொழிப்பற்றையும் பார்த்த பின்பு— நாங்கள் இது நாள் வரை நமக்குள் மோதிக்கொண்டதற்காக வெட்கப் படவும் செய்தோம்!' என்று கூறினார்.

நான் அத்துடன் விட்டு விடவில்லை!

'சோழ மன்னர்களே! நீங்கள் படையெடுத்து வந்து இலங்கையை அன்று கைப்பற்றினீர்கள்! அப்படிக் கைப்பற்றிய நீங்கள், இந்நாடு முழுவதையுமே தமிழர்கள் நாடாக்கி வைத்திருந்தால், இன்று தமிழர்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்காதல்லவா? என்றேன்!

'வாழு, வாழ விடு' என்ற அடிப்படையில் — தமிழர்களின் நெறி முறைகளுக்கேற்ப — அரசியல் தர்மத்தின் அடிப்படையில், அன்று நாம் அப்படிச் செய்ய விரும்பவில்லை! யார் எதிர் பார்த்தார்கள் இந்த நிலை நேருமென்று!'' இது சோழ மன்னனின் பதில்!

'என்றாலும், உங்கள் தனி நாயக அடிகளார் எங்களை விடக்கெட்டிக்காரர்! நாங்கள் முச்சங்கம் வைத்து தமிழாய்ந்ததெல்லாம் தமிழ்ப் புலவர்கள் மத்தியிலேதான்! தமிழ் நாட்டில் மட்டுமேதான்! ஆனால் உங்கள் நாட்டுத் தனிநாயக அடிகளார்— மலேசியாவில், பாரிசில்— இப்படி வெளிநாடுகளில் எல்லாம் தமிழ் சங்கம்கூட்டி தமிழாய்ந்து விட்டார்! அது மட்டுமல்ல — வேற்று இனத்தவர்கள்—வேற்று மொழி பேசும் அறிஞர்கள் — தமிழைப் பற்றி ஆசையுடனும் ஆர்வமுடனும் ஆராய்கின்ற நிலையை உண்டாக்கி விட்டார். நாம் மூவராலும் செய்ய முடியாமல் போனதை அந்த தனிமனிதர் செய்து வருகிறார்; அவரது பணி வாழ்க!'

—இவ்வாறு கூறினான் பாண்டிய மன்னன். பாண்டியன் இவ்வாறு கூறிக்கொண்டிருக்கும் போது ஓர் தமிழ்ப் புலவர் வந்து அவனுக்கு வணக்கம் செலுத்துவதைக் கண்டேன்!

'வாரும், கணியன் பூங்குன்றனாரே! நீர் அன்று தமிழ்ச் சங்கத்தில் பாடினீரே 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று. உமது அந்தப்பாடல் இன்று அகில உலகமும் கேட்கிறது! ஈழத்தில் எதிரொலிக்கிறது! உமது அந்தப் பாடல் அடியைக்கொண்ட கோபுரக் கொடிகள் ஊரெங்கும் பறக்கின்றன. நீர் அப்போது இப்படியெல்லாம் ஒரு காலம் வரும்; உமது பாடல் அகில உலகப் புகழ்பெறும் என்று எதிர்பார்த்தீரா? இதற்கெல்லாம் காரணம் யார் தெரியுமா? தமிழ் முனிவர் தனிநாயக அடிகளாரே!' என்றான் தென்னவன்!

'மன்னா! அதுகேட்டுத்தான் இங்கு ஓடோடி வந்தேன்; 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதுடன் இன்னொன்றும் கூறியிருக்கிறேன். அதையும் தமிழ் மக்கள் மறந்துவிடக்கூடாது-'தீதும் நன்றும் பிறர்தரவாரா' என்பதுதான் அது;'

'நண்பரே! அதை யார் மறந்தாலும், என் ஈழத் தமிழ் மக்கள் ஒரு போதுமே மறக்கமாட்டார்கள்! பார்த்திரா என்ஈழநாட்டுத் தமிழ் மக்களின் மொழியுணர்ச்சியை! என்ன நினைக்கிறீர்?'

'யாரது—ஈழத்துப் பூதன் தேவனாரா? வருக வருக! நீர் பிறந்த நாடல்லவா ஈழம்! அங்கு தமிழுணர்ச்சிக்குகேட்கவும் வேண்டுமா? அதோ மற்றும் புலவர்கள்—கம்பன் வள்ளுவன், இளங்கோ, முதல் பாரதி, பாரதிதாசன் வரை வருகிறார்கள் போலிருக்கிறதே!' என்றார் கணியன் பூங்குன்றனார்.

'அதில் என்ன ஆச்சரியம்? தமிழ்த்தாய்க்கு எங்கு விழா நடக்கிறதோ அங்கு எல்லாத் தமிழ்ப் புலவர்களும் கூடுவதில் வியப்பென்ன? அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஈழத்தில் நடைபெறும் தமிழ் மாநாடு பற்றி என்ன சொல்கிறார்கள் என்று கேட்போமா? என்றார் பூதன் தேவனார்!

'கேளும் கேளும் — நீர் ஈழத்துப் பூதன் தேவன் தானே — உமது நாட்டை ஏனையோர் சிறப்பித்துக் கூற வேண்டுமென்று எதிர்பார்ப்பதில் வியப்பில்லைத்தானே!' —இது கணியன் பூங்குன்றனின் பதில்!

வள்ளுவரே தாங்கள் என்ன கூறுகிறீர்கள்?

'திருக்குறளை நான் அன்று எழுதிவைத்தேன். அந்தத் திருக்குறளுக்குள் உலகமே அடக்கம் என்பதை இன்றைக்குத்தான் அனைவரும் அறிந்து போற்றி வருகிறார்கள்! திருக்குறளின் மீது உலகமே இருப்பதாக கொடியிலேயே போட்டிருக்கிறார்கள். வேற்று மொழிகளில் எல்லாம் குறள் மொழி பெயர்க்கப்படுகின்றன. எல்லோரும் குறளைச்சுவைத்துப் படித்து வருகிறார்கள்! இதைவிட வேறு மகிழ்ச்சி எனக்கு என்ன இருக்க முடியும்? குறளைப்படிப்பதுடன் நில்லாது அதைப் பின்பற்றவும் மனித சமுதாயம் முன்வர வேண்டும். திருக்குறளை உலகெங்கும் பரப்பி வரும் உங்கள் ஈழநாட்டு தனிநாயக அடிகளாருக்கும் பண்டிதர் இரத்தினத்துக்கும் சுவீடன் நாட்டறிஞர் பிறைகோமுக்கும் என் நன்றி!

கம்பர் கருத்தை அறியலாமோ?

'நான் வர்ணித்த அயோத்தியின் அழகை விட பிரமாதமாக யாழ் நகரை அழகுபுரியாக்கி வைத்திருக்கிறார்கள் ஈழத்தமிழ் மக்கள்: இதை வர்ணிக்க என்னிடம் வார்த்தையில்லை!

'இந்திர விழா எத்துணை அழகுடன் பழந் தமிழ் நாட்டில் நடந்ததென்பதை சிலப்பதிகாரத்தில் நான் தீட்டி வைத்தேன். அந்த இந்திர விழாவையும் வெல்லுகின்ற விதத்தில் ஈழத்தமிழர்கள் நடத்திடும் தமிழ் விழாக்கண்டு பெருமிதமடைகிறேன்' — இவ்வாறு கூறினார் சிலம்பு தந்த இளங்கோ.

'பாரதியாரே! என்ன மலைத்துப் போய் நிற்கிறீர்கள்?'

'என்ன சொல்வேன் பாண்டியா! தமிழின் ஒளி உலகெலாம் பரவாவிட்டால் என்பெயரை மாற்றியமையுங்கள் என்றேன். என்வாக்குப்படி தமிழின் ஒளி இன்று உலகெங்கும் பரவி வருகிறது. அதன் ஒளியில் வெளிநாட்டார் மயங்கி நிற்கிறார்கள்! 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்றும் 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச்செய்வீர் என்றும் பாடினேன். இன்று தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவி வருகிறது! நான் ஈழத் தமிழகத்தில் பார்க்கின்ற தெருவெல்லாம் —வீதியெல்லாம் — வீடெல்லாம் இன்றைக்கு தமிழ் முழக்கம் கேட்டு மகிழ்ச்சியில் குதிக்கிறேனடா! திறமையான புலமையை வெளிநாட்டார் வணக்கம் செய்கின்றனர்; என் கனவு நிறைவேறி வருகிறது.''

''புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களே! உங்கள் கருத்தென்ன?

''தமிழுக்குத் தொண்டு செய்யும் தமிழனுக்கு தடைபோட்ட நெடுங்குன்றம் தூள் தூளாகிவிட்டது! தமிழ் எனும் பேருணர்ச்சியை வெல்லும் சக்தி யாருக்கும் கிடையாது!''

''பக்தி ஆவேசம்கொண்ட 60,000 மக்களின் மத்தியில் தமிழ்த் தெய்வம் கொலுவீற்றிருந்ததை 1954ம் ஆண்டு யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழாவில் கண்டேன். அந்தக் காட்சியை மீண்டும் ஒரு முறை காண முடியுமோ என்று அப்போது ஐயம் தெரிவித்தேன் இப்போது மீண்டும் அதே யாழ்நகரில் முன்னையைவிட அதிதீவிர பக்தி ஆவேசம் கொண்ட இலட்சக்கணக்கான மக்கள் மத்தியில் தமிழ்த் தெய்வம் கொலுவீற்றிருப்பதைக் காண்கிறேன்! அன்று அந்த மாநாட்டில் 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்—தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே' என்று தம்முடைய சொற்பொழிவில் குறிப்பிட்ட தனிநாயக அடிகளார் 'இன்றும், முன்னணியில் இருந்து தமிழ்ப் பணியாற்றுவதைக் காண்கிறேன் இதை விட வேறு மகிழ்ச்சியான விழாவை நான் கண்டதேயில்லை'' என்றார் பேராசிரியர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி.

''தமிழ் நாட்டில் இரண்டாவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டின்போது தமிழக மக்கள் காட்டிய எழுச்சியைவிட, ஈழத் தமிழர்கள் தங்கள் மொழி மீது காட்டுகின்ற எழுச்சி கண்டு இதயம் நிறைய மகிழ்ச்சியில் திளைத்துக்கிடக்கிறேன்'' என்றார் பேரறிஞர் அண்ணா ஒரு சிட்டிகை பொடியை மூக்கில் உறிஞ்சி விட்டு அதை மேல் துண்டால் துடைத்துக் கொண்டே!

ஆறுமுக நாவலரும், சுவாமி விபுலானந்தரும், சுவாமி,ஞானப்பிரகாசரும், அறிஞர் சித்திலெப்பையும்— எதுவும் கூற மறுத்துவிட்டனர்.

''எங்கள் நாட்டு மக்களின் பெருமையைப் பற்றி—அவர்களது மொழி, இன உணர்வு பற்றி நாங்கள் சொல்வது தற்புகழ்ச்சியாகிவிடும்— அதை வெளிநாட்டார் கூறுவதே பொருத்தமாக இருக்கும் என்பது அவர்களின் வாதம்!

அதுவும் சரிதானே!

சரி......... இவர்களையெல்லாம் எங்கே சந்தித்தாய் என்று வாசகர்களாகிய நீங்கள் கேட்பது எனக்குக் கேட்கிறது!

ஆம்—1974ம் ஆண்டு சனவரி திங்கள் 9ம் நாள் புதன் கிழமை காலை நல்லூர் சட்டநாதர் ஆலய முன்றலில் அலங்கார ஊர்திகள் புறப்படும் அழகு காண்பதற்கு காத்திருந்தபோதே மேற்கண்ட பெரு மக்களுடன் மானசீகமாக என்னால் உரையாட முடிந்தது!

சரி,இனி அலங்கார ஊர்திகளின் அழகுப் பவனியை காண்போமா?




## ஈழத் தமிழினம் விடுதலை பெறும்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சர்களை மேடையில் ஏற்றி தமிழுக்கு தங்கள் அரசு ஏதோ பெரிய உரிமைகளை எல்லாம் அள்ளி வழங்கியிருப்பதாக எடுத்துக் கூறுகின்ற அரசியல் பிரசார மேடையாக அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டை பயன்படுத்த எண்ணுகின்ற நச்செண்ணத்தை நான் கண்டேன்.

அதன் பின்னரே — எந்த வித முட்டுக் கட்டை வந்தாலும் மாநாட்டை எப்படியும் யாழ்ப்பாணத்தில் நடத்தி முடிப்பது என்று உறுதியெடுத்தோம். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாநாட்டில் துளியும் அரசியல் கலக்கப்படவில்லை. தமிழர் கூட்டணியினரோ, தமிழரசுக்கட்சியினரோ தமிழாராய்ச்சி மாநாட்டு கருத்தரங்குகளில் பேசவில்லை.

நடைபெற்ற மூன்று தமிழாராய்ச்சி மாநாடுகளைவிட, நான்காவது மாநாடு. தொடங்கு முன்பே அகில உலகப் பிரசித்தி பெற்றுவிட்டது. ஈழத்தில், தமிழர்கள் உரிமை இழந்து தவிக்கின்ற அவல நிலையையும் எடுத்துக் காட்டிவிட்டது.

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் பின்னர் — தமிழ் மக்களின [illegible] கொழுந்துவிட்டெரியும் மொழியுணர்வையும், விடுதலை எழுச்சியையும் பார்க்கும்போது தமிழ் சமுதாயத்தின் விடுதலை மிக அண்மித்து விட்டது என்றே நான் திடமாக கூற விரும்புகிறேன்.''

தலைமை வகித்த வே. க: கந்தசாமி பேசுகையில்— தமிழாராய்ச்சி மாநாட்டில் இறந்தவர்கள் எப்படி இறந்தார்கள் என்கிற உண்மை ஒரு நாள் அம்பலத்துக்கு வரவே செய்யுமென்றும், தமிழர்களுக்கு தமிழர்களே பகைவர்களாக இருக்கிறார்கள் என்றும், அரச நீதி தமிழர்களுக்கு கிடைக்காவிடினும், தெய்வ நீதி நிச்சயம் கிடைக்குமென்றும், நம்மை நாம் ஆளும் காலம் நிச்சயம் விரைவில் வருமென்றும் குறிப்பிட்டார்.

கொழும்புத் தமிழ்ச் சங்க செயலாளர் ஐ. சரவணமுத்து பேசுகையில்—தமிழர்கள் தமிழ்ப் பகுதியில் கூட இன்று பாதுகாப்பற்று வாழ வேண்டிய ஆபத்தான நிலை தோன்றியுள்ள தென்றார்.

கலாநிதி சி. பத்மநாதன் பேசுகையில் — மாநாட்டை நடத்துவதில், தமிழாராய்ச்சிமன்ற இலங்கைக்கிளைக்கு ஏற்பட்ட இடைஞ்சல்களையும், உள்ளிருந்தே நடைபெற்ற சதிகளையும் எடுத்துரைத்தார்.

திருவாளர்கள் [illegible] கனக. மனோகரன், க. நவசோதி, ஆகியோர் பேசிய [illegible]

பின்னர் இறுதியில் திரு. க: சச்சிதானந்தம் நன்றிதெரிவித்தார்.

அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் நடைபெற்ற படுகொலையை கண்டித்தும் — இதுசம்பந்தமாக விசாரிக்க அரசு ஒரு பாரபட்சமற்ற உயர்மட்ட நீதிக்குழுவை நியமிக்க வேண்டுமென்று கோரியும்— இங்கு நடைபெற்ற இந்தப் படுகொலை பற்றி ஐ. நா. சபைக்கு தெரியப் படுத்த ஆவனசெய்யப்படவேண்டுமென்று கோரியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தை ஐ. தி. சம்பந்தன் முன்மொழிந்தார்.

## தினகரனின் திருகுதாளம்!

கொக்குவில் பொற்பதி இந்து இளைஞர் சங்கத் தலைவர் திரு. க. வர்ணகுலசிங்கம் சுதந்திரனுக்கு விடுத்துள்ள ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:—

''எமது சங்கம் கடந்த தமிழ்-ஆராய்ச்சிமகாநாட்டு இறுதி நாளில் நடைபெற்ற அசம்பாவிதத்தால் பலர் மரணமடைந்ததை முன்விட்டு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக பொங்கல் விழாவை கொண்டாடாமல் இத்தினத்தை துக்கதினமாக அனுட்டித்து மேற்படி சங்க கட்டிடத்தில் கறுப்புக் கொடியும் ஏற்றி, வளமையாக பொங்கும் நாங்கள் இம்முறை பொங்காமலும் இருந்தோம்.

''ஆனால்கடந்த 28.1.74ல் வெளிவந்த தினகரன் பத்திரிகையில் மூன்றாம் பக்கத்தில் நல்லூர் தேசிய பேரவை உறுப்பினரும், வடபகுதி விவசாய அரசியல் அதிகாரியுமான திரு. சி. அருளம்பலம் அவர்கள் எமது மேற்படி சங்க மண்டபத்தில் நடாத்தப்பெற்ற பொங்கல் தின விழாவில் பங்குபற்றி நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தியதாக கீழ் காணும் தலைப்பின்கீழ் எழுதப்பட்டுள்ளது:

''எமது அரசு விவசாயிகளை நன்கு கௌரவிக்கின்றது''

—வடபகுதி விவசாயி அரசியல் அதிகாரி.


இப்பொய்ச் செய்தியையும், இவர்களின் செயலையும் தேசியபேரவை உறுப்பினரின் கற்பனைப் பேச்சையும் எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. அத்தோடு மேற்படி பத்திரிகையின் தகுந்த சட்ட நடவடிக்கை எடுப்பதாகவும் தீர்மானித்துள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7வது வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ் நகர்)

"சொர்க்கம்" என்பது இறப்புக்குப் பின் ஏற்படுவது அல்ல! இல்லத்தில் நல்வாழ்வும் இன்பமும் நிறைவதே சொர்க்கம்!




சிவாஜி, கே. ஆர். விஜயா,
பாலாஜி, மனோகர், நாகேஷ்,
சச்சு, எம். ஆர். ஆர். வாசு
நடித்தது

# 6வது வாரம்

செல்லமகால் வின்சர் (யாழ்நகர்)




எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
ஏ. வி. எம். ராஜன்,
புஷ்பலதா,
அசோகன்,
சோ, மனோரமா
நடித்த

முரசொலி மாறனின்
"சந்திரமண்டல விஜயம்"
எனும் "காலட்சேபம்"
திரையில் தருபவர்! எம்.ஜி.ஆர்.

# 2-வது வாரம்

கெபிட்டி (கொட்டாஞ்சேனை)


ஜெமினி-சாவித்திரி
எம். கே. ராதா,
வீரப்பா,
ஈ. வி. சரோஜா,
தங்கவேலு
—நடித்த—

## கற்புக்கரசி

(புத்தம் புதிய கொப்பி)

# இப்பொழுது காட்சியளிக்கிறது!

சென்ட்ரல் (மருதானை) 2, 6, 9.00
ஞாயிற்றுக் கிழமை 10, 2, 6, 9.00



- இவ்வாண்டில் தலைசிறந்த நகைச்சுவை படம்
- காதல், பணம், திருமணம் சம்பந்தப்பட்ட ஓர் நகைச்சுவைக் கதை!

நாகேஷ், விஜயலலிதா, எம். ஆர் ஆர். வாசு
— நடித்த —

# தேன் கிண்ணம்


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டினரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ இலக்கத்தில் 1974ம் வருடம் பெப்ரவரி மாதம் 17-திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org